
www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

வைகாசி, 1992

# வான்மதி









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அட்டைப்படக் கவிதை

பாசமிகு மருமக்களே
பசுமை மிகு தமிழை
பயிலப் புறப்பட்டு விட்டீர்கள்.
பல கோடி மகிழ்ச்சி என் மனமெங்கும்.

பிறந்த மண்ணின் புழுதியில் தவழ்ந்து விளையாடிய போதும்
பட்டங்கள் பல பெற்று உயர்ந்து விட்ட பின்பும்
பைந்தமிழை விடவொரு இனிமை மொழி வேறுண்டோ.
பதிலாக வந்தும்தான் இணையாகுமாமோ.

சின்னஞ் சிறு சிட்டுக்களே
செந்தமிழ் அது உங்கள் சொந்த மொழி.
உம் அன்னை உமைத்தாலாட்டிய மொழி
உம் தந்தை அன்போடு அரவணைத்த மொழி.

கண்ணுக்கு மையிட்டு கருங்கூந்தலிலே மலர் சூடி
காதலன் வர வெண்ணி
வழிமேலே விழி வைத்து - வந்தவுடன் அன்போடு
காதல் பேசும் கன்னி மொழி
கற்றிடுங்கள் கவலையின்றி
அதுவே உமக்கு உயர்ந்த மொழி.

-ரமேஷ் -

- திருமண வைபவங்கள்
- பிறந்ததின விழாக்கள்
- பொது நிகழ்ச்சிகள்
- வீடியோ திரைப் படங்கள்

எவையாயினும் கலைவண்ணத்துடன் ஒளிப்பதிவு செய்திட
பிரான்சில் என்றும் உங்கள் நினைவுகளில்,



TELE MOVIE KKS



மற்றும் திருமணமண்டபம், மணவறை வசதிகள்
ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

K. K. S TELE MOVIE
25, RUE BISSON, 75020 PARIS.
தொடர்புகட்கு: 43 58 15 59 / 47 91 43 15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வான்மதி

ஆசிரியர் குழு:-
செல்வி. கலைவாணி அம்பலவாணர்
செல்வன் குணசிங்கம் சிவரூபன்
செல்வன் சிவசுப்பிரமணியம் பாலமுருகன்
செல்வி துஷ்யந்தி மகேந்திரராஜா
திரு. அ. இரட்ணகாந்தன்

தொகுப்பாசிரியர்கள்:-
கு. சிவரூபன் (ரமேஷ்)
சி. பாலமுருகன் (பாலன்)

கலை இலக்கிய அரசியல் பிரிவு:
கு. சிவரூபன்
க. சண்முகநாதன்
அ. இரட்ணகாந்தன்

மகளிர் பிரிவு:
திருமதி நீலாட்சி சிவசுப்பிரமணியம்

சிறுவர் பிரிவு:
சண்முகதாசன் (சண் மாஸ்டர்)
துஷ்யந்தி மகேந்திரராஜா

பொதுத் தொடர்புகள் முதியோர் பிரிவு:
பாஸ்கரன் (மீசாலையூர் சுதந்திரன்)

ஓவியர்கள்:
கணேஷ்ராஜ்
பிரபாகரன்

புகைப்படங்கள்:
T. ரங்கேஸ்வரன்

வான்மதி முதலாவது இதழில் வெளிவந்த 'இரண்டு உலகங்கள்', 'பரலோகப் பயணம்', 'போராட்டம்' ஆகிய பகுதிகள் இடநெருக்கடி காரணமாக இவ்விதழில் இடைநிறுத்தப்பட்டுள்ளன. மூன்றாவது இதழில் அவை தொடர்ந்து வெளிவரும். வாசகர்களின் தொடர்ந்த பங்களிப்புக்களையும், கதை, கவிதை, கட்டுரைகள் நகைச்சுவைத் துணுக்குகள், உலக விளையாட்டுச் செய்திகள் மற்றும் கேள்விகள் விமர்சனங்களையும் எதிர்பார்க்கிறோம். சந்தாக்காரர் ஆகவிரும்புபவர்கள் கடிதமூலம் தொடர்புகொள்ளவும்.

## வாசகர்களுடன் ஒரு நிமிடம்

அன்பிற்குரிய வாசகர்களே

வான்மதி தனது இரண்டாவது பிறப்பை நிகழ்த்தியுள்ளது. முதல் இதழில் அறிவின்மை, கவலையீனம் ஆலோசனை எதுவுமில்லாத காரணங்களால் நிகழ்ந்த குறைகளை ஓரளவுக்கு நிவர்த்தி செய்துள்ளோம். பல எழுத்தாளர்கள் மற்றும் விமர்சகர்கள் முதலாவது இதழ் பற்றித் தெரிவித்த அபிப்பிராயங்களைக் கவனத்திற் கொண்டு செயற்பட்டுள்ளோம். வான்மதி அனுபவ அறிவைப் பெறாத இளைய எழுத்தாளர்களின் படைப்பு, எனவே அது ஆழ்ந்த எழுத்தனுபவம் வாய்ந்தவர்களுக்கும் அறிவுஜீவிகளுக்கும் பெருவிருந்தாக இருந்திருக்காது எனினும் சிற்றுணவாக என்றாலும் இருந்திருக்கும் என்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். பிரான்சில் முதல் இதழே ஆயிரம் இதழ்கள் விற்கப்பெற்று சாதனை படைத்துள்ள பெருமையினையும் வான்மதியே பெற்றுள்ளது. விமர்சனங்களும் அபிப்பிராயங்களும் அறிவுரைகளும் எம்மை வளர்த்து வளம் படுத்துகின்றன. இடம் பெற்ற பிழைகளுக்கும் மன்னிப்புக் கோரி எம்மை வலுவாக்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். வெளியீட்டு விழாவில் பங்கெடுத்து உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இவ்வண்ணம்
செல்வி. கலைவாணி அம்பலவாணர்

அன்பான வாசக நண்பர்களே!

வான்மதி பத்திரிகை தனது கன்னி இதழை தங்கள் முன் படைத்தது. வான்மதி கலையகத்தின் ஆசிரியர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கு தாங்கள் தந்த ஆதரவைக்கண்டு மிகவும் பூரிப்படைகின்றேன். இளம் ஆசிரியர்களும் உறுப்பினர்களும் தமது எண்ணங்களையும் படைப்புக்களையும் துணிவுடனும் நேர்மையுடனும் முற்போக்கான சிந்தனைகளுடன் தந்திருப்பது, பலரின் பாராட்டுக்களைப் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது. அதேவேளை சில பழமைவாதிகளின் சிந்தனைகளைத் தூண்டியிருப்பதும் எமது வெற்றியின் முதற் படியாக கருதுகின்றேன். எமது குறைகளை சுட்டிக் காட்டி எம்மை வளப்படுத்த அறிவுரைகளையும் ஆதரவையும் தந்த பெரியோர்கள் அனைவருக்கும் அன்புடன் என் நன்றியைத் தெரிவிக்கின்றேன். மேலும் வான்மதி தனது ஆக்க வேலைகளில் முதல் இதழில் ஆரம்பித்த சிறுவர் பகுதியான பூந்தளிர்களை இவ்விதழில் விரிவாக்கியிருப்பதுடன் மாதருக்கான மகளிர் அரங்கினையும் ஆரம்பித்துள்ளது. அத்துடன் தமிழீழத்திலும் வெளிநாடுகளிலும் வாழும் தனித்தும், ஆதரவற்றும் இளைய சமுதாயத்தின் முற்போக்கு, பிற்போக்கு கொள்கைகளினால் விரக்தியடைந்த வயோதிபர்களும் தமது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் மூன்றாவது இதழில் இருந்து வயோதிபர் பகுதி வெளிவர இருப்பதையும் தங்களுக்கு அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். வான்மதி மேலும் செழிப்புடன் வளர வாசகர்களின் ஆதரவையும் ஆக்கங்களையும் வழங்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அ. இரட்ணகாந்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அமைதிப் படையுடன் ஒரு வினாடி

- தயா -

தமிழீழ மக்களிற்கு
தரமான அமைதியினை
பெற்றுத்தான் கொடுத்திடுவோம்
பிரபாவின் கையினிலே!
எனக்கூறி வந்தனரோ
இந்தியப் படையினரும்.

தமிழீழம் காண்பதற்கு
காப்பரண்கள் அமைத்திடவே
ஒழுங்காக அழித்தனரோ
வடக்கிலுள்ள தென்னைகளை!

சிறிலங்காப் படையினரை
ஒழித்திடுவோம் எனக்கூறி
தமிழீழப் படையினரை
காட்டிற்குள் கலைத்தனரோ!

அமைதி என்ற போர்வையில்
சொறி கொணர்ந்த படையினர்
தமிழீழ மக்களிற்கு
நிவாரணமாகக் கொடுத்தனரே!

இந்தியப் படையினரின்
இரக்கமுள்ள இச்செயலால்
"சப்லோன்" மருந்திற்கும்
விலைமதிப்பு ஏறியதோ!

அகிலத்தில் பெயர் போன
இந்தியப் படையினரும்
அச்சுவேலி தாண்டுவதற்கு
அஞ்சு மாதம் எடுத்ததேனோ!

அமைதிப்படை வரும்போது
நெய்நாற்றம் அடிக்குமென்று
முகத்தைத்தான் சுழித்தபடி
சொல்லுவர் எம்மக்கள்.

மகாத்மா காந்தி வழிவந்த
மாசில்லா புத்திரர்கள்
கிழவிகள் கற்பைக் கூட
கரைத்தனரோ எம்மண்ணில்!

பழசுகளின் கற்பிற்கு
மாலை போட்ட மன்னர்கள்
இளசுகளின் கற்பினைத்தான்
விடுவாரோ எம்மண்ணில்!

புலிகள் என்ற பெயர் சூடி
ஓராயிரம் இளைஞர்களை
ஒன்றாகப் பிடித்துத்தான்
கொன்றனரோ எம்மண்ணில்.

மீசை நீண்ட சீக்கியர்
ஏழாயிரம் வந்தாலும்
வீரமுள்ள புலிகளும் தான்
அஞ்சிடுமா எம் இனமே!

முதலில் வந்த படையினர்க்கு
முடியாமல் போகவே
பரா கூர்க்கா சீக் என்று
பல் படைதான் வந்தனரோ!

எப்படைதான் வந்தாலும்
எதிர்த்து நின்று போரிட
தயக்கமின்றி செயற்பட
துணை நின்றான் நம் தலைவன்!

முல்லைத் தீவுக் காட்டினிலே
முன்னேற முடியாமல்
பாடுபட்ட படையினர்
காட்டைத்தான் அழித்தனரோ!

இந்தியப் படையினரும்
புலிகளுடன் போரிட
தாவிப்படை சிலவற்றை
தங்களுடன் சேர்த்தனரோ!

புலிகளை அழித்திடவே
இந்தியாவும் பார்த்ததுதான்
இழப்புகள் பலவற்றை
கொடுத்துத்தான் ஓடினரோ!

வீரமான புலிகளிற்கு
தோள்கொடுத்து போரிட
தயக்கமின்றி சென்றிடுவோம்
விரையுங்கள் எம்மினமே!

www.tamilarangam.net

www.tamilarangam.net



# விடியல்

பூன் ஜென்மம் பின் ஜென்மம் மனித ஏட்டில் எழுதப்படாததொன்று மரத்தில் மலர்ந்த மலர் வாடி மண்ணில் வீழ்ந்த பின் மறுபடியும் மலர்வதில்லை. மதம் பிடித்த யானைகள் என்கிறோம் அவற்றை விட மோசமானவர்கள் மதவாதிகள்.

உங்களை நீங்களே 'நாம் மதவாதிகளல்ல' என்று கூறிவிட்டால் உங்களுக்குள் உள்ள வெறித் தன்மை போய்விடுவதில்லை. பிறர் உங்களை மதவாதிகள் இல்லை என்று எப்போ கூறுகிறார்களோ அன்றுதான் நீங்கள் மதவாதிகளில்லை என்பது தெளிவாகும். மதம் என்பதன் மறுபெயர் வெறி. அது எங்கள் வீடுகளில் வெகு நாட்களாக வசிக்கிறது. எங்களுக்குள் உள்ள விட்டுக்கொடுக்காத தன்மையாலும் புரிந்து கொள்ளாத் தன்மையாலும் அது எங்களுக்குப் புலப்படுவதில்லை. பிறரின் கவனிப்பையும் இது தள்ளி விடுகிறது.

போதனை பண்ணுவதே எம் வேலை. நான் ஏற்கவில்லையென்றால் அது எமக்குத் தேவையற்றதொன்று. எங்கள் கடமையையே நாம் செய்கிறோம் என்று விடாப்பிடியாக பிடிக்கும் போது பித்துப் பிடித்தவர்கள் நீங்கள். வெறி அங்கே விரித்தாடுகிறது.

ஒன்றின் மீது நாம் வைத்திருக்கும் அழிக்க முடியாத பற்றையே ஆசை என்கிறோம். ஆகவே ஆசைகளுக்கு அப்பாற்பட்டவன் என்று உம்மைக் கூறிவிடலாமா?

ஆசை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விதமாக உள்ளது. உன்னிடமுள்ளது இன்னொருவனிடம் இல்லை. அவனிடமுள்ளது உன்னிடமில்லை. இதுவே ஆசையின் உற்பத்திக் கோலம்.

## சென்ற இதழ் தொடர்ச்சி

**சி. பாலன்**

1. சர்வ வல்லமை என்றால் பலருக்கு அதன் பொருள் புரிவதில்லை. அதனால் சர்வேஸ்வரனின் செயற்பாடுகளை புரிந்து கொள்ள முடியவில்லை.
2. மதம் என்றாலே மனிதனை வெறியனாக்குவதும் அடிமைப்படுத்துவதும் நிமிரவிடாமல் செய்வதுமாகவுள்ளது.
3. விஞ்ஞானத்தின் கண்டு பிடிப்புக்கள் அனைத்தும் மனிதனை அழிவுக்குக் கொண்டு செல்வதாகப் பலர் கூறுகிறார்கள். உண்மையில் அதை அதிகமாக மனிதனே அழிவுக்கு பயன்படுத்துகின்றான்.
4. கடவுளுக்கு நாம் செலுத்தும் அன்பையும் ஆதரவையும் விட உலகில் நாம் வாழும் முறையே அவனுக்குப் பிடித்தமானது.
5. கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாடு என்ன? அவன் சர்வ வல்லமை படைத்தவன், இவன் சகலதையும் அவனுக்கு கொடுப்பவன்.
6. மனிதன் உலகில் வாழ்வதற்கு வகுப்பு முறைகள் நிச்சயம் தேவை. ஆனால் அவை காட்டுமிராண்டித்தனமாக இருக்கக்கூடாது.
7. வாழும் மானிடர்கள் மகாதேவனுக்கு கொடுத்த பரிசு என்ன? மதப் புத்தகங்களும், கற்சிலைகளும், போதனை மேடைகளும், ஆராதனைகளும், கட்டிவைக்கப்பட்ட கோயில்களும்தான்.
8. பைபிள்! இது தனக்கு முன்னால் சிறந்த எந்த அறிவாளியையும் வைத்திருக்க விரும்பவில்லை.
9. உலகத்தை கடவுள் படைத்தார் என்று கூறுபவர் பலர். ஏன் படைத்தான் என்று விளக்க யாருமில்லை.
10. உலகில் வாழப் பிறந்தவர்கள் நாங்கள். இவ்வுலகில் ஒரு வினாடி வாழ்வதாயினும் கொடுத்து வைத்திருக்க வேண்டிய ஒன்று. ஆனால் அதையே சரியாக அனுபவிக்காமல் ஆண்டவன், ஆராதனை என்று வாழ்நாள் முழுவதையும் கழிப்பது அர்த்தமற்றது.

ஒவ்வொரு தரிப்பு நிலையத்திலும் நின்று போகும் புகையிரத வண்டியில் ஒருவர் ஏற ஒருவர் இறங்குகின்றார் மனித வாழ்க்கையும் இப்படியே. வித்தியாசம் என்னவென்றால் உலகம் உருண்டோடிக் கொண்டிருக்கின்றது. இறங்குபவன் இறங்க ஏறுபவன் ஏறிக்கொண்டேயிருக்கிறான்.

மனிதனை ஏற்றுவது இன்னொரு மனிதன், ஆனால் இறங்குவது அவனே. சில சமயங்கள் கதவைத் திறந்து தள்ளியும் விடுகின்றனர். இதுவே இப்போது அதிகம், அதிகம்.

ஏறும் போது பயணம் செய்கிறான், இறங்கும் போது எங்கே செல்கிறான். இறங்கும் போது அவன் இயந்திரம் இயங்க மறுக்கிறது. அதன் சேவையும் உடலும் மண்ணுக்கே சொந்தமாகிறது.

தொடரும்..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் பூங்கா

வான்மதியே வருக வண்ணமலரே வருக
பாரிஸ் புதுமலரே வருக பால்நிலவே வாழ்க
உன் வரவு எமது இனிய உள்ளங்களில்
என்றும் இனிய மணம் பரப்பும்.

புஸ்பம் - St Denis.

ஆசிரியருக்கு!
வானில் தோன்றுகின்ற முழு மதியே,
ஒளி தந்து காத்திடும் கலை மதியே,
இன்று மக்கள் மனதில் மணம் பரப்பும்
செந்தமிழ்க் கவியே, வான்மதியே,
சிறுவர்கென்றொரு பூந்தளிரும்,
மதிமாமா வழங்கிடும் ஊக்கங்களும்.
தீபம் என்றொரு கவிமலரும்,
போராட்டத்தோடு பரலோகப் பயணம்
தொடர்ந்திடும் பாலன் இவர்..
தொடரும் விடியல் கதையினையும்
நேயர் நமக்கு சமர்ப்பித்தார்.
கும்மி அடிக்கும் பாடல் தனை
நம் குழந்தைகள் பாடும் அழகுதனை
பெனோவின் மலக்குண்டு நாற்றத்துடன்
வெடிச் சிரிப்பு. ரமேஸ் வசந்தியை
வாழத்தான் விட்டாரா,
வான்மதியின் அட்டை அழகான மட்டை
சித்திரை பிறந்திட்ட வான்மதிக்கு
சித்திராப் பௌர்ணமி பெயரும் உண்டோ,
இவ்விதழ் போல் மறு இதழும் மலர்ந்திட
நேயர்கள் நாம் காத்திருக்கிறோம்.

அன்புடன்
T. கண்ணன், R. ரஞ்சினி, கிளி-பாலன்
R. லக்ஷா, T. டெய்சி, R. லின்ஷா.

வான்மதி மலரே!
வருக உன் வரவே
இனிய மணம் பரப்பும் - எம்
இதயங்களின் இளையநிலவே

காவலூர் செந்தா - பாரிஸ் 16.

வான்மதியின் பிறப்பு என்னவோ என்று அங்க லாய்த்துக் கொண்டு படித்தேன். அங்கே ஆணவமும் குடி கொண்டிருந்தது. அழகு எங்கே, அங்கே ஆண வமும் உண்டு என்பதைப் புரிந்து கொண்டேன். அட் டைப் படம் அழகாக இருந்தது. உள்ளே விடயங்கள் அனைத்தும் அறிவு சார்ந்ததாக இருந்தது.

ஏழாலையூர் எஸ். ராஜன்
Garges les Gonesse.

கலைமகள் கல்வி நிலையம் மூலம் ஈழத்தில் மாணவர்களுக்கு அறிவூட்டியவர்கள், வான்மதி கலை யகம் மூலம் ஐரோப்பாவில் கலையை வளர்க்க வேண் டும். வான்மதி எம் பெருநிதி.

N. ரூபன் - Swiss.

## திரையுலகின் கறுப்பு வைரம்



தமிழ்த் திரைவானில் பிரகாசிக்கும் கறுப்பு வைரம் ரஜனிகாந். அபூர்வராகங்கள் திரைப் படத்தில் இயக்குனர் கே. பாலசந்தரால் அறிமுகப் படுத்தப்பட்ட இவர் இன்று இந்தியா எங்கும் பேசப்படும் சுப்பர் ஸ்டார். இந்தியாவில் மட்டுமல்லாது உலகெங்கும் வாழும் தமிழ் ரசிகர்களின் கனவுலக மன்னன். திரைப்பட தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்களின் வசூல் சக்கரவர்த்தி. சினிமாவில் சேருவது, புகழ் பெறுவது, பின் அரசிய லில் நுழைந்து ஆட்சியைப்பிடிப்பது என்பது இந்திய அரசியல் வானில் சாதாரண நிகழ்ச்சி மறைந்த தமிழக முதல்வர் எம். ஜி. ஆர் காட்டிய பாதை இது. எம். ஜி. ஆர் மட்டுமல்லாது அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றவர்களும் சினிமா உலகுடன் தொடர்புகளை ஏற்படுத்தி உள்ளனர். கருணாநிதி இன்றும் தொடர்கிறார். ஆனால் எம். ஜி. ஆரைப்போல் நிலைத்து நின்றவர்கள் யாருமில்லை. தங்களது சினிமாக் கவர்ச்சி மூலம் அரசியலில் நிலையூன்ற முயன்று மூக்குடைபட்டவர்களில் சிவாஜிகணேசன், ராமராஜன், பாக்கியராஜ், ராஜேந்தர், எஸ். எஸ். சந்திரன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். தமிழ்த் திரைவானில் இரண்டு சுப்பர் ஸ்டார்களான கமல் ஹாசனும், ரஜனிகாந்தும் ஆரம்பகாலம் முதல் அரசியலைத் தவிர்த்தே வந்தனர். ஆனால் அண்மைக்கால நிகழ்வுகள் ரஜனியை அரசியலுக்குள் இழுத்து வரும் என்றே தோன்றுகின்றது. தனது வெறும் சினிமாக் கவர்ச்சியையும் எம். ஜி. ஆரின் செல்வாக்கையும் ராஜீவ் அனுதாப அலையையும் வைத்து தமிழக முதல்வர் பதவியைக் கைப்பற்றியுள்ள ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் ரஜனியை அரசியலில் பங்கேற்பார் என உறுதி செய்வனவாக உள்ளன. ரஜனியை தம்முடன் இணைத்துக் கொள்ள அ. தி. மு. க தவிர்ந்த அனைத்துக் கட்சிகளும் போட்டி போடுகின்றன. இந்திரா காங்கிரஸ் ரஜனி தம்முடன் இணைவார் என கருத்து வெளியிட்ட போதிலும் ரஜனி அதை மறுத்துள்ளார். பல லட்சம் ரசிகர்களை தமக்குள் இழுத்து வைக்கும் ரஜனி அரசியலில் நுழைவாராயின் இன்னொரு எம். ஜி. ஆர் உருவாவது நிச்சயம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலைந்து போன உறவுகள்



சிறுகதை

-மதன்-

செங்கதிரோனின் அணைப்பினால் சிவந்த வானம் மெல்ல நிறம்மாறிக் கொண்டிருந்தது.

வழக்கம்போல் பூபாளத்தில் துயிலெழுந்த சுகன்யா அந்தக் காலையின் இனிமையை அனுபவிக்கலானாள். எத்தனை தரம் பார்த்தாலும் சலிக்காத அந்தப் பொழுதின் இனிமையில் தனை மறந்திருந்த அவளை குருவிகளின் ஊடல் கவரலாயிற்று... அவள் பார்வையை அவற்றின் மீது செலுத்தினாள்...

பூங்கொத்து ஒன்றின் மேல் பெண்பறவை அமர்ந்திருக்க அதன் ஜோடி அதன் தலையைக் கோதிக் கொண்டிருந்தது. இருந்தாற்போல் பெண்பறவை ஏதோ சொல்லியபடி தத்திச் செல்ல மற்றப் பறவை சமாதானம் சொல்லுவது போல் ஏதோ சொல்லிக் கொண்டு அதன் பின்னால் செல்லத் தொடங்கியது. பெண்பறவைக்கு ஆண் பறவையின் மேல் இரக்கம் தோன்ற அது பேசாமல் நின்று அதனைத் தன்னிடம் வர அனுமதித்தது.

சுகன்யாவிற்கு இது புதிதல்ல, தினந்தோறும் அவள் அவற்றைக் காண்பாள், காலையில் அவள் எழுந்திருக்கும் பொழுது அவை உற்சாகமாய் கானமிசைக்கும், மாலைப் பொழுதுகளின் சில பொழுதுகளில் அவளின் வீட்டு ஜன்னலிலிருந்து அவளிடம் எதை எதையோ சொல்லும்.

'சுகன்யா இன்னும் வெளிக்கிடல்லையா? நேரமல்லே ஆகுது'

அம்மாவின் அழைப்புக் கேட்கவே அவள் குருவிகளிடமிருந்து விடுபட்டு தனது வழமையான கடன்களை முடித்துக்கொண்டு கல்லூரிக்குச் சென்றாள்.

கல்லூரியில் வழக்கத்துக்கு மாறாக எல்லோரின் கைகளிலும் மாணவர்களால் வெளியிடப்படும் 'சிலம்பு' பத்திரிகை இருக்கக்கண்டு, என்னவாக இருக்குமென்றறிய 'என்னடி ராணி எல்லோரும் சிலம்போட நிக்கிறியள் அப்படி என்ன ஷ்பெஷல் இன்டைக்கு...'

உனக்குத் தெரியாதா இந்த மாத இதழில் 'பெண்ணின் விடிவு' என்று நம்ம ஹீரோ அதுதானடி தினேஷ் அருமையானதொரு கவிதை எழுதியிருக்கிறாரடி, இந்தா படிச்சுப் பார்..

என்று ராணி கூறும்போதே சுகன்யாவின் நினைவுகளில் தினேஷ் சிரித்தபடி வந்து போனான்.

கல்லூரியில் சேர்ந்து கொஞ்ச நாட்களானாலும் தன் கலகலப்பான சிரிப்பால் எல்லோரையும் அவன் மயக்கியிருந்தான்.

என்னடி படிக்க முன்பே எங்கோ போய்விட்டாய், சரி சரி படித்துவிட்டு உன்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லு.

சுகன்யா அதனைப் பிரித்தாள்.

அன்பினும் இனிய தோழியரே!
பொங்கி நீங்கள் எழுந்திடுவீர்
பொங்கி நீங்கள் எழுந்திடுவீர்

உங்கள் கண்களின் கண்ணீர் மழையினால்
பாலைவனங்கள் கூட சோலைவனங்களாகிவிட்டன.
ஆனாலும், சீதன அரக்கனால் சீரழிந்த
உங்கள் வாழ்வு இன்னும் சீர் பெறவில்லையே..

அன்று முதல் இன்று வரை அகப்பையும் கையுமாய்
அடுக்களையே தஞ்சமென்றெண்ணி
வெறும் கிணற்றுத் தவளைகளாய்
நாட்டின் வாரிசுகளைச் சுமந்திடும் கருவறைகளாய்
மட்டுமே வாழுகின்றீர்கள்
இந்நிலையிலிருந்து விடுபட
நீங்கள் ஏன் முயலவில்லை?
எனவே தான் கூறுகின்றேன்
பொங்கி நீங்கள் எழுந்திடுவீர்
பொங்கி நீங்கள் எழுந்திடுவீர்

அன்பான என் தோழர்களே!
பெண்ணின் பெருமையை நாம்
போற்றினால் மட்டும் போதாது அவள்
உள்ளத்துணர்ச்சிகளுக்கும்
இடம் கொடுத்திடல் வேண்டும்.
கட்டிலுக்கு மட்டுமல்ல அவள்
எமைக் காப்பவளும் அவளே..

எனவே நாமும் அவளை
எங்களிலொருவராய் ஏற்றிடுவோம்
அவளைப் போற்றிடுவோம்
அவளின் விடிவிற்காய்
வழி அமைத்திடுவோம்..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படித்து முடித்து அதில் சிறிது நேரம் ஒன்றிப் போயிருந்த சுகன்யா..

'அருமையாய் இருக்குதடி'

'ஏன் இருக்காது எனக்கு எல்லாம் தெரியுமடி, நீயும் கூட அவனுக்காக ஏங்க ஆரம்பித்து விட்டாய், சரி, சரி ஒரு Good news இன்றைய மாணவ மன்றத்தில் தினேஷின் பேச்சும் இருக்கு. அங்க மணி அடிச்சாச்சு வாரும் போவம் என்று கூறி ராணி அவளையும் அழைத்துக் கொண்டு வகுப்பிற்குள் நுழைந்தாள்.

■ ■ ■

மதிய இடைவேளையின் பின் மாணவர் மன்றம் ஆரம்பமாகியது. வழமையான பேச்சுகள், கவிதைகள், பாட்டுக்கள், முடிந்தபின் தினேஷ் பேச ஆரம்பித்தான். அவன் பேசவாரம்பித்ததும் கல்லூரி மண்டபமே நிசப்தமாகி விட்டது.

'அன்பான எம் தோழியரே! நீங்கள் இன்னுமா தூங்குகின்றீர்கள். தூங்கியது போதும் விழித்தெழுங்கள்... ஆணுக்கு நீங்கள் எந்த விதத்தில் குறைந்தவர்கள்.. எதற்காக இன்னும் அடிமைபோல் வாழவேண்டும். சிலர் நினைக்கலாம் பெண்ணுக்கு நாங்கள் என்ன குறை வைச்சோம்? எத்தனையோ பெண்கள் வேலைக்குப் போகவில்லையா? எத்தனையோ பேர் வெளிநாடு போகவில்லையா? நாங்களும் அவர்களை அனுமதித்துள்ளோமே என்று... அவர்களுக்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன். நாங்கள் அனுமதித்துள்ளோம் என்பதே, பெண் ஆணுக்கு அடங்கினவள், பாவம் ஏதோபிழைக்கட்டும், விட்டு விடுவோம் என்று கூறுவது போலல்லவா இருக்கிறது. அதே போலத்தான் வெளிநாடு செல்லும் பெண்கள் எவ்வளவு போராடி எவ்வளவு அவமானங்களைத் தாண்டிப் போகவேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல கலியாணத்தால் பாதிக்கப்படுபவளும் பெண்தான். புனிதமான திருமணம் சீதனத்தால் கொச்சைப்படுத்தப்படுகின்றது. திருமணம் சந்தையாக்கப்பட்டு பெண் விற்பனைப் பொருளாக்கப்படுகின்றாள். இதில் வேடிக்கை என்னவென்டா பெண்ணை வாங்குபவனுக்கு பொன்னும் பொருளும் கொடுக்கப்படுவது தான்.

உங்களில் அனேகர் நினைக்கலாம் நான் ஒரு ஆண் எதற்காகப் பெண்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டும், எதற்காக வக்காலத்து வாங்கவேண்டுமென்று. நாளாந்தம் எங்கடை வாழ்கையில் எத்தனையோ துன்பமான சம்பவங்களைப் பார்க்கிறோம், கேட்கிறோம், அவற்றிற்காக கவலைப் படுகின்றோம், முடியுமானால் உதவிசெய்யத் துடிக்கின்றோம். அது போலத்தான் ஆண்டாண்டு காலம் துன்பத்தில் சிக்கி, கண்ணீர் பூக்களை சொரிந்து காகிதப் பூக்களாகும் எங்கள் பெண் இனத்தின் விடிவுக்காய் நானும் ஏதாவது செய்ய வேண்டும் என விரும்புகின்றேன். பெண்ணானவள் எங்கள் சமுகத்தில் ஒரு அங்கம், எங்களுக்குள்ள உரிமைகள் அவர்களுக்கும் உண்டென்பதை இங்குள்ளவர்கள் உணரவேண்டும், பெண்ணினத்தின் விடிவுக்காய் போராட வேண்டும்.

அவன் பேசிக்கொண்டிருந்தான், ஆனால் சுகன்யா சிந்தனை ஆற்றில் அவன் இணைந்துவர படகோட்டம் செய்துகொண்டிருந்தாள்.

கரகோஷம் பலமாக ஒலிக்கவே அவள் திடுகிக்கிட்டு நிமிர்ந்தாள்.. தினேஷ் பேச்சை முடித்துவிட்டு அவளருகே காலியாக இருந்த இருக்கையில் வந்தமர்ந்தவாறே..

'என்ன சுகன்யா எங்கோ கன தூரத்திற்கு போயிருந்தீங்க போல கிடக்கு, என் பேச்சு பிடிக்கவில்லை என்றால் எழுந்து போவதுதானே?

சிரிப்புடன் அவன் அவளிடம் கேட்டான்.

'இல்லை அப்படியொன்றுமில்லை ஏதோ யோசனைகள்...

என்றாள் சுகன்யா.

'சரி நான் வாறன், போகும் போது எனக்காக கொஞ்சம் 'வெயிட்' பண்ண முடியுமா? உங்களிடம் கொஞ்சம் கதைக்க வேண்டும்'

என்று கூறியவாறு அவன் எழுந்து சென்றான்.

■ ■ ■

கல்லூரி முடிந்து அவள் புறப்பட ஆயுத்தமான போது தினேஷ் வந்து இணைந்து கொண்டான். இருவருமே மௌனமாக நடக்க ஆரம்பித்தனர். எங்கோ சிட்டொன்று மெல்லிய குரலில் பாடத் தொடங்கியது. அது ஒரு வசந்தகாலமானபடியால்

பூக்களின் நறுமணங்கள் காற்றில் மிதந்து வந்து நாசியை முத்தமிடத் தொடங்கின.

'சுகன்யா'

தினேஷ் மெதுவாக அழைத்தான். அவள் என்னவென்பது போல் அவனைப் பார்த்தாள்.

'நான் உங்களை... உங்களை மனதார விரும்புகிறேன், வாழ்கையில் எத்தனையோ பெண்களைச் சந்தித்திருக்கிறேன் ஆனால் வந்த அன்றே, உங்களைச் சந்தித்த கணமே உங்களிடம் என்னை இழந்துவிட்டேன். நீங்கதான் என் உயிர். என் இறுதியென்றும் தீர்மானிச்சிட்டேன். தயவு செய்து இதனைப் படிச்சிட்டு நல்லதொரு பதிலைத் தாங்க...


சுகன்யா நடுங்கும் கைகளுடன் அதனைப் பிரித்தாள். அதில்

நேசத்திற்குரியவளே!
என் வாழ்க்கையின் ஒளிவிளக்காய்
என் வழிகாட்டியாய்
என் கரம்பற்ற நீ வரவேண்டும்.
ஏனெனில்
எனக்கெல்லாமே நீதான்
நீ தரும் பதிலில்தான்
என்னுடைய நாளைய பொழுதுகள் புலரும்
பதில் சுபமாகவிருந்தால்
என் மனம் ஆனந்தத்தில் துள்ளும்
உன் பதில் சுபமாகவில்லாவிடத்து
என் மனம் உடைந்து விடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



ஒரு கிளி:- முந்தி எல்லாம் எங்களை 'கெற்றப் போலால' கலைச்சுக் கலைச்சு அடிப் பினம், ஆனால் இப்ப எல்லாம் அப்பிடிச் செய்யிறேல ஏன்?

மற்றக் கிளி:- அவையள் இப்ப துவக்குகளால சிங்களச் சிப்பாய்களைத்தான் சுடியி னம், அதனால எங்களை மறந்திட்டி னம் போல?

- K. யீனோ -



விஷ்ணு :- யாழ்ப்பாணத்தில இருந்து புலிகள் 'பிளேனுக்கு' அடிக்கிற ஷெல்லுகள் எல்லாம் இஞ்ச எங்கடை பக்கம் வருகுது.

சிவபெருமான்:- அப்ப உடனடியா தேவலோகமெங் கும் 'பங்கர்' வெட்டச் சொல்லு.

- ஜி. ஸ்ரீபானியா -

கண்கள் கண்ணீரைச் சொரியும்
எதுவானாலும்
உன் பதில் தான்
எனக்கிப்போது தேவையானது.

அதனைப் படிக்கும் போதே சுகன்யாவின் மனது ஆனந்தத்தால் துள்ளியது... என்ன...? தினேஷ் என்னை நேசிக்கின்றாரா? அப்படியானால் நான் அதிஷ்டசாலியா?

அவள் நிமிர்ந்து தினேஷை நோக்கினாள். தினேஷ் அவளின் முகத்தையே பார்த்துக் கொண்டி ருந்தான்.

'தினேஷ் நானும் உங்களை விரும்புறேன்'

என்று சுகன்யா கூறும் போது தினேஷ் சந் தோஷ மிகுதியால் அவள் கரங்களைப் பற்றி முத்த மிட்டான்.

■ ■ ■

காலத்தின் ஓட்டத்தில் அவர்களின் காதலும் வளர்ந்தது. நாளாந்தம் அவர்கள் சந்தித்துக் கொண்டார்கள். சுகன்யா நினைத்தாள், தானே உலகின் அதிஷ்டசாலி என்று. ஆனால் அவளின் நினைப்பு நீண்ட நாள் நீடிக்கவில்லை...

வழமையான அவர்கள் சந்திக்கும் ஒரு பொழுதிலே, இரவும் பகலும் உறவுகொண்டதினால் பிரசவித்த ஒரு அந்திப் பொழுதிலே அவள் தன்னை மறந்திருந்த போதுதான் அவன் அதைச் சொன் னான். பதட்டமில்லாமல் நிதானமாய்த்தான் தினேஷ் சொன்னான். அதைக் கேட்டதும் அவளின் உடம் பெல்லாம் பதறியது.

'நீங்க என்ன சொல்லுறீங்க'

சுகன்யாவின் கண்கள் ஈரத்தால் நனையத் தொடங்கின. நம்பி ஒருவனிடம் ஏமாந்து விட்டோமே என்ற வேதனை ஒரு புறமிருந்தாலும், இப்படிப் பட்டவர்களிடம் அடிபணியக்கூடாது என்ற வைராக் கியம் அவளைத் தலைநிமிர வைத்தது.

'சொல்ல என்ன இருக்குது, உன்வீட்டார் 50 பவுன் நகையும், ஒரு இலட்சம் காசும், அத்துடன் உன்ரை வீட்டைச் சீதனமாகத் தந்தால் கலியாணம் செய்யிறன். இல்லையெண்டால்.....?

'இல்லையெண்டால்....'

'இல்லையெண்டால் என்னை மறந்திடவேண் டியதுதான்'

தினேஷ் தோள்களைக் குலுக்கிய வண்ணம் அலட்சியமாய்ச் சொன்னான்.

'உங்களுக்கு வெட்கமாயில்லை, சீதனம் வாங் குவேன் என்றால் பேந்தேன் காதலிச்சீங்க...'

'சுகன்யா ஏதோ உன்மேல ஆசைப்பட்டேன், நீ ஒரு பரம்பரைப் பணக்காரி, அதோட அழகுமிருந் தது. அதுதான் காதலிச்சேன், நீ இப்ப சீதனம் தராட்டி நான் என்ன செய்ய, நீ என்னைப் புரிந்து கொள்ளப் பார்... என்ரை படிப்பிற்கு என்ர பெற் றோர் எவ்வளவு செலவு செய்திருப்பினம். அவங்க அதை சீதனம் மூலம்தானே பெறமுடியும். அதுதான் அவங்க சீதனம் கேட்கிறாங்க..

'வீட்டிலை கேட்கினம் எண்டதற்காய் பெரிசா கேட்க வந்திட்டியளோ... என்னுடைய படிப்புக்கும் என்னுடைய அப்பா செலவுதானே செய்தவர்.... ஏதோ உங்களுக்கு மட்டுமே செலவு செய்தது போல் கத்திறியள்... வெட்கமாயில்லை உங்களுக்கு...

'இதிலை வெட்கப்பட என்ன இருக்கு... வரப்போற காசு எங்கள் இரண்டு பேருங்கும் தானே...

'இரண்டு பேருக்குமோ... கொஞ்சம் முன்பு சொன்னீங்க அப்பா, அம்மா கேட்கினம் என்று இப்ப இரண்டு பேருக்குமோ... இஞ்ச எனக்கு இன்னும் இரண்டு தங்கச்சி இருக்கினம், நாளைக்கு அவங்க ளுக்கு இப்படிக் கொண்டா எண்டால் எங்க நாங்க போவது..?

'இல்லை சுகன்யா... நான் என்ன சொல்ல வாறேனெண்டால் காசு இருந்தால்....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'ஏன் பணம் இல்லையெண்டால் எங்களாலை வாழ முடியாதா...? நாங்க பிறகேன் படிச்சோம், பேசாமல் வீட்டிலை இருந்திருக்கலாம் போலை.. ஏன்தான் எல்லோரும் காசு காசு என்று சாகிறியளோ தெரியாது... சீதனம் கொடுக்க வசதியில்லை எண்டால் பெண்களுக்கு வாழ்வே வராதா..? அவங்க காலம் முழுதும் கன்னியாய் கண்ணீருடன் காலம் தள்ளத்தான் வேண்டும்.

'சுகன்யா... நான் சொல்லுறதைக் கேள்.'

'தினேஷ் போதும் உங்கடை பேச்சு.. ஆம்பிளை எண்டு உங்களைச் சொல்ல வெட்கமாயில்லை.. மனிசி மாரைக் காப்பாற்ற வக்கில்லாமல், அவள் கொண்டாற காசிலை அவளைக் காப்பாற்றுவேன் எண்டால் போ...

'எடியேய் நிப்பாட்டு.. ஏதோ காதலிச்சிட்டன் இனி உன்னை யாரும் கலியாணம் செய்ய மாட்டாங்க எண்டு பாவம் பார்த்தால் அளவுக்கு மிஞ்சிப் போறாய்.... இனி உன்னை..

'Mr தினேஷ்'

சுகன்யாவின் அழைப்பில் இருந்த ஆவேசம் அவனை நிமிரச் செய்தது...

'Mr தினேஷ்.. பெண்கள் எண்டைக்கும் இப்படி இருக்க மாட்டினம். உங்களைப் போல பேடிகள் காதலிக்கும் போது ஏதோ வேகத்தில உன்னை ஒரு நாளும் கைவிட மாட்டேன், நீயில்லாமல் என்னாலை வாழமுடியாது, வீட்டார் என்ன சொன்னாலும், யார் எதிர்த்தாலும் நீதான் என் மனைவி என்று அடிச்சுச் சத்தியம் செய்வீங்க, உங்கட எழுத்துக்கள் பேச்சுக்கள் எல்லாம் சீதனம் வாங்குவதை கண்டிப்பதாய் பெண் விடுதலைக்கென எழுதப்பட்டவை பேசப்பட்டதாய் இருக்கும்....

ஆத்திரத்தில் அவள் வாயிலிருந்து வார்த்தைகள் நெருப்புப் பொறிகளாய்ப் பறக்கத் தொடங்கியது. தினேஷ் ஒன்றும் செய்ய இயலாதவனாய் கைகளைப் பிசைந்து கொண்டிருந்தான். அவள் தொடர்ந்தாள்.

'தினேஷ் காசு எனக்குப் பெரிசல்ல, என்னிடம் இருக்கும் காசிற்கே எத்தனையோ பேர் என்னை மணமுடிக்கத் துடிக்கினம்... ஆனால் எனக்கு வேண்டியது அதில்லை என்னை அன்புடன் நேசிக்கிறவன் என்னுடைய காசை மதியாமல் என்னை மதிக்கிறவன், ஆண் பெண் உறவு என்பது வெறும் காசுக்கு மட்டுமல்ல, ஒரு நல்ல நட்புக்கு உதாரணமாயிருக்க வேண்டும் என நினைப்பவள் நான்.

தினேஷ் ஆரம்பத்தில் உங்கள் வேஷத்தை நம்பி உங்களைக் காதலிச்சேன்... ஆனால் உங்கள் போலி முகமூடி கிழிந்து உங்கள் உண்மைச் சொரூபம் தெரியும் போது என்னால் எள்ளளவும் விரும்ப முடியாமல் இருக்குது.

தினேஷ் நீங்க யாரை வேண்டுமானாலும் கலியாணம் செய்யலாம்... இனி உங்கள் நிழல்கூட என்மேல் படவேண்டாம்... உங்களை மாதிரி ஒரு அயோக்கியனை இவ்வளவு காலமும் விரும்பினதிற்கு வெட்கப்படுகிறேன். நான் வாறன்..

சுகன்யா அலட்சியமாய் சொல்லிவிட்டு எழுந்து நடக்கலானாள்... மனத்தின் வேதனைகள் கண்ணீராய் அரும்பி வடியலாயிற்று ஆனாலும் ஒரு போலியை இனம் கண்டு விலகி விட்டோம் என்ற உணர்வு அவளின் மனக் காயத்தை ஆற்றலாயிற்று...

அவள் போவதைப் பார்த்தபடி தினேஷ் சிலையாக நிற்கலானான். ■

# அவர்கள் நினைப்பது....

அவர்கள் மழையைப் பார்க்கவில்லை.
அவர்களுக்கு சிரிக்கக் கூடத் தெரியவில்லை.
அவர்களின் கண்களில் கண்ணீர் கூட இல்லை.
தமிழ்க் குழந்தைகளே.

புறப்படாமல் ஏனங்கு நிற்கிறீர்கள்
வெறும் காற்றைப் பார்த்துக் கொண்டு.

தூரத்தில் மனம்.
தூரத்தில் கண்கள்

எங்கள் பிறந்த நாட்டிலே
தமிழர்கள் சாகின்றார்கள்.
அவர்களுக்காக ஒரு பாட்டுப் பாடுவோம்.
அவர்கள் கண்களைத் திறப்பதற்கு

எம் தமிழ்க் குழந்தைகள்
தூரத்தில் சாகின்றார்கள்.
எங்கள் வானம் கறுக்கின்றது.

அந்தச் சூட்டு நிலத்திலே
பிணங்கள் தான் பூக்கின்றன.
எங்கள் செல்வங்களை
அவர்களின் சூரியன் இருட்டிக்கிறது.

எங்கள் தேசத்திலே
பசுமையான காடுகள் தெரியவில்லை.
பாலைவனங்கள் உண்டாக்கப்படுகின்றன.
தீக் கோழியை விட விரைவாக
தமிழ்க் குழந்தைகளுக்கு..

ஒரேயொரு அதிர்ஷ்டம் தான்
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும்
அவர்கள் நினைப்பது
அமைதியை உண்டாக்க.

- ம.துஸ்யந்தி -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்ற இதழ் தொடர்ச்சி

# என் அன்புச் சின்னம்

சி. பாலன்

'மலையில் இருந்து ஓடிய நதி அல்ல
என் மனதில் இருந்து ஓடிய நதி'

மக்களின் அபிலாசைகளுக்கு எதிரான எந்த அரசாட்சியும் நிலைத்து இருந்ததில்லை. ஆண்டுகள் செல்லச் செல்ல, மக்களுக்கு புதிது புதிதாகப் பசி எடுக்கிறது! அவற்றைப் போக்க புதிய தின்பண்டங்கள் அவர்களுக்குத் தேவைப்படுகிறது! இவை தீர்க்கப்படாத பொழுது அங்கே புரட்சி எழுகின்றது!

நானும் இங்கு வந்து சேர்ந்து விட்டேன். ஒரேயொரு முறைதான் எனக்குக் கடிதம் வந்தது, அம்மாவிடம் இருந்து அந்த மடலின் முடிவில் ஒரு வசனம் இருந்தது. உன் சகோதரர்களாகிய லோலோவும், தும்பனும் இறந்து விட்டனர்! காகிதச் சித்திரத்தில் பொறிக்கப்பட்ட பொன் எழுத்துக்கள்! மூன்று முறை இவர்களிடம் அடி வாங்கியிருக்கின் றேன்! நான் செய்த கெடுதலான செயல்களுக்கு 'அறிவுரை' கூறினார்கள், அதை நான் ஏற்கவில்லை, பாடசாலை போ... என்றனர்! நான் மறுத்தேன்.

அன்று ஒரு நாள் என் அம்மா கேட்டாள், என் அண்ணன் லோலோவிடம் நீ இறந்தால் வீண்தானே? என்று அப்போழுது அவர் 'நான் இறந்தால் போஸ்ரர் ஒட்டுவார்கள்தானே அது போதாதா' என்றான். உடனே நான் உனக்கு ஒரு சிலை வைக்கிறேன். என்றேன். [ஓ வீரர்களே எங்கள் மண்ணில் உங்கள் பெயர்கள் எழுதிவைக்கப்படும். உணர்ச்சிக் கவிஞன் காசியானந்தன்] நான் சிலை வைக்கிறேன் என்று சொன்ன இடத்தில் இன்று சென்றி, பாதுகாப்பு அரண், மக்களிற்காகவும், மண்ணின் விடிவிற்காக வும், தன் உயிரைக் கொடுக்கத் துணிந்தவனே வீரன்; மண்ணின் மைந்தன், மக்கள் தலைவன் அந்த மண் ணில் செதுக்கப்படவேண்டிய சிலைகள் அவன் எந் தத் தலைவன் என்றாலும்!

அன்று இருந்த போராளிகள் எல்லாம் என் அண்ணன்களே. என் முதுகில் தட்டிவிடுவார்கள், நீ வளர்ந்து பெரியவனாக வேண்டும். இந்த மண்ணில் நீ வாழ வேண்டும், இந்த நாட்டைக் கட்டிக் காக்க வேண்டும் என்பார்கள்.

நான், மாபிள் அடித்து விளையாடிக் கொண் டிருக்கும் போது லோலோ என்னைக் கலைத்தார். அப்போது சுபாஸ் சொன்னான் சின்னப் பொடியன், விடடா விளையாடட்டும் ஏதோ நீ செய்யாதமாதிரி யென்று. அப்பொழுது அவன் நான் செய்தபடியால் தான் கலைக்கிறேன் என்றான். அப்பொழுது அவன் அனுபவந்தான் பேசியது என்று நான் அறியவில்லை. இன்று தெரிகின்றது. நாட்டைக் காக்க மட்டும் போராளிகள் அல்ல, நாட்டை வளர்க்கவும் போரா டுபவர்கள்!

ஒன்பதரைவரை என் சிந்தனை என்னைக் கரை சேர்த்தது. சிறிது நேரத்தில் தொலைபேசி அலறியது, ஆவலுடன் அதன் அருகில் சென்றேன். அதற்கிடையில் ஒரு ஆள் எடுத்துவிட்டர். அப்போ அந்தச் சந்தர்ப்பத்தை இழந்து விட்டேன். எதற்காக எனக்கு உண்மையை மறைக்கின்றார்கள் என்று யோசித்தேன். கொஞ்ச நேரத்தில் அக்கா சொன்னா, உன் சித்தப்பாவையும், அன்ரியையும் யார் சுட்டார்கள் என்பதனை நான் கூறிக்கொள்ள ஆசைப்படவில்லை! இந்திய இராணுவம் சுட்டுவிட் டார்கள். அன்ரி தப்பிவிட்டா என்றார்கள். அவ தற்பொழுது L. T. T. E யின் மருத்துவமனையில் இருப் பதாகவும் சொன்னார்கள். இறைத்து முடித்த கிணற் றில் நீர் எப்படி மீண்டும் சுரக்குமோ அது போல என் கண்களில் இருந்து நீர் சுரந்தது.

அறியாத வயது. அறிஞர்களே அந்தப்பக்கம் எட்டிப் பார்த்திருக்க மாட்டார்கள், அறிந்த வயதில் கூட எட்டிப் பிடிக்க முடியாத தூரம். விரோதம் என்பதன் பொருள் புரியாது. அடிபட்டு ஆறுமுன் கைகோர்ப்போம், இப்படி வாழ்ந்த வாழ்க்கை இன்று குருத்தடைத்துப் போன வாழை போல் வளர முடி யாமல் தத்தளிக்கின்றது. பஞ்ச பாண்டவர்கள் போல் பிள்ளைகள். என் சின்னம்மாவிற்கும் பொன் விளையும் பூமிதான் அவர்கள் வருமானத்திற்கும் அட்டகாசத்திற்கும் ஓர் அளவில்லை.

சுட்டவன் எல்லாம்தான் இந்த மண்ணின் விடிவிற்காக போராடுபவன் என்று தன் தலையில் எழுதி வைத்துள்ளார்கள். நல்லவை, கெட்டவை, நன்மை, தீமை ஆதரிப்பதும் அதை விடுவதும் அவ ரவர்

சொந்த அபிப்பிராயங்களைப் பொறுத்தே அமையும். வேங்கையை வேட்டையாடச் சென்ற வேடன் முடியாமல், முடிவில் வேங்கையின் உறை விடமாகிய குகையைக் குட்டிச் சுவர் ஆக்கிவிட்டு தன்னை விட இந்த உலகில் வீரன் உண்டா என்பது போல், தாய்மையைக் கொல்வதற்கு தன்னியக்கத் துப்பாக்கி எதற்கு? முத்து எடுக்கிறேன் என்று மூழ்கி விட்டு முத்தில்லை மூழ்கியவன் கையில் சிற்பிகள், அவற்றைக் காட்டி முன்நிற்பவனுக்கு விலைபேச முடியுமா? தன் மேல் சாயத்தைப் பூசிக்கொண்டு எத்தனை காலந்தான் ஆட்சிப் பீடத்தில் அமர முடி யும்?

தேடிவந்தவர்கள் எங்கே...? தெரியவில்லை. அதற்காகத் துப்பாக்கியின் தோட்டாவை தாய்மார்மீது செலுத்துபவர்கள் தாயகத்தைக் காப்பவர்களா? தன் உயிரைக் கொடுப்பவன்தான் தியாகி. எவர் வேண் டுமானாலும் தம் பெயர்களைச் சொல்லலாம். ஆனால் உண்மைக்கு மாறானவை எல்லாம் என்றோ ஒரு நாள் வெளியே எட்டிப் பார்க்கும். அப்போது உடைகள் இன்றி வீதியில் உலாவ வேண்டி வரும். பக்தர்களின் பேச்சுக்குப் பயந்து பாமர மக்களும் இசைந்தனரா? ஆதியில் உலகைத் தட்டை என்று கூற உண்மைகள் உறக்கத்தைத்தான் தேடியதேயொ ழிய நிரந்தரச் சவப்பெட்டிகளை இல்லை. இருண்ட பின்.

- அடுத்த இதழில் முடியும் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# ஓநாய் மனிதர்கள்

சி. பாலன்

கற்றவை கை
மண்ணளவு
என்பதை எண்ணாமல்
உலகத்தையே...
புரட்டி எடுத்துவிட்டோம்
என்று எண்ணும்
பட்டப்படிப்பு படித்தவர்களை
பரிதாபப் பட்டியலில்
போடு மனிதா!

உலகத்தில்
உள்ளவையனைத்தும்
ஒன்றுடன் ஒன்று
சார்புடையதாம்!
அப்படியானால்
பட்டியலில் உள்ள
பட்டம் பெற்றவர்கள்
எப்படித்தான்
பெற்றவர்கள் ஆனார்கள்
கேள் மனிதா!

உலகை முழுமையாக
அறிந்தவன் எவனும்
உலகில் இல்லை!
உலகை முழுமையாக
அனுபவித்தவன் எவனும்
உலகில் இல்லை!

உலகத்தை வென்றவர்கள்
கொண்டு சென்றார்களா
உலகத்தை?
இல்லை
உயிரைத் தொலைத்துவிட்டு
உடல் கொடுத்துவிட்டு
சென்றார்கள்
உலகத்தை விட்டே...!
உண்மை என்ன
உயிர் உள்ள வரைக்கும்
உண்மை என்கிறான்
மனிதன் தன்னை!
நிற்கும் வரைக்குமே
நிலை உலகில்
காலனின்
கயிறு ஒன்று உண்டு
என்பதை மறந்து
காலத்தை வென்றவர்கள் போல்
கதைப்பவரையே
உலகம் தன்னுள்
அதிகமாய் கொண்டுள்ளது.

படித்துப் பட்டம் பெற்றால்
பரலோகத்தைப் பார்த்துவிட்டோம்
என்று எண்ணுபவரே இந்த
படித்தவர்கள்!

சமுதாய எல்லைக்கு
வேலிபோடத் தெரியாதவர்களே
சட்ட மன்றங்களின்
நீதிபதிகள்

கல்லூரியைக் கண்டவர்கள்
கற்றுவிட்டோம் என்கின்றனர்
காணாதவர்களோ கற்கவில்லை
என்கின்றனர்.
கல்வி என்ன
கல்லூரிக்கு மட்டும்தான்
சொந்தம் என்று
எழுதி வைத்தவையோ...


படித்துவிட்டுப் பண்பு தெரியாமல் - இப்
பாரினில் பவனி வரும்
பள்ளிப் பேய்களே....
சமுதாயத்தின் முன்னிலையில் - தம்
முகத்தை ஒட்டி வைத்துள்ளனர்
மனிதப் பண்பை மறந்துவிட்டு
மந்தைக்குள் உலாவும்
ஓநாய் மனிதர்கள்!

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வசந்தியை





(பல வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'வசந்தியை வாழவிடுங்கள்' கதையை குறுநாவலாக அமைத்துத் தர ஆசிரியர் முன்வந்துள்ளார். எனவே கதை தொடரும்)

# வாழவிடுங்கள்

- ரமேஷ் -

"ஆனந்தன் என்ன பேசாமல் இருக்கிறியள். வீட்டிலை ஏதேனும் பிரச்சனையே" தொடர்ந்து கேட்டாள் வசந்தி.

'இல்லை வசந்தி அப்பா என்னை வெளிநாட்டுக்குப் போகட்டாம். நாட்டிலை நடக்கிற பிரச்சனையளாலை அவர் என்னை இங்கை வச்சிருக்கப் பயப்படுகிறார். ஒரே பிள்ளை நான். எனக்கு ஒண்டு நடக்குமெண்டால் அவர்களாலை தாங்கவே முடியாது. என்ன செய்யிறது எண்டு எனக்குப் புரியேல்லை.'

ஆனந்தனின் பதிலைக்கேட்டு அதிர்ந்த வசந்தி 'அப்ப எனக்கு என்ன முடிவு' கோபமும் அழுகையுமாகக் கேட்டாள்.

'வசந்தி உன்னை விட்டுப் பிரியிறதெண்டால் என்னலை முடியாது.... ஆனா அப்பா அம்மாவின்ரை பேச்சையும் தட்டேலாது...... நான் ஜேர்மனிக்குப் போய் ஒரு வருஷத்துக்குள்ளை எல்லா ஒழுங்குகளையும் செய்து உன்னைக் கூப்பிட்டுப் போடுவன். நான் இஞ்சையிருந்தா எங்கடை கலியாணம் நடக்குமா எண்டது சந்தேகம் தான். வெளிநாடு போகிறதுதான் எங்கடை எதிர்காலத்துக்கு நல்லதெண்டு நான் நினைக்கிறேன்.' ஆனந்தனுக்கு என்ன பதில் சொல்வதெண்டு வசந்திக்குப் புரியவில்லை.

'ஆனந்தன் என்னைக் கை விட்டிடாதையுங்கோ என்னாலை என்ரை குடும்பத்துக்கு அவமானம் வரக்கூடாது. எனக்கு முன்னாலை இருக்கிற இரண்டு அக்காமாருக்கும் கலியாணம் நடக்க வேணும். எனக்குப் பின்னாலை இருக்கிற தம்பிமாருக்கும் தங்கச்சிக்கும் அப்பாவும் நானும்தான் ஆதரவு. அம்மாவை இழந்த பிறகும் எங்களை சீரும் சிறப்புமாய் வளர்த்தெடுத்துவிட்ட அப்பாவிற்கு நான் செய்யக்கூடிய உதவி குடும்ப மானத்தைக் காப்பாற்றுகிறது தான்.' அழுதே விட்டாள் வசந்தி.

'என்னை.... என்னிலை நம்பிக்கையில்லாமல் ஏன் என்னை விரும்பினனி.' கோபத்துடன் கேட்டான் ஆனந்தன். 'இல்லை.... எனக்குப் பயமாயிருக்கு....' வசந்தி தடுமாறினாள்.

'ஒண்டுக்கும் யோசியாதை. எல்லாம் நல்லபடி நடக்கும். இனி உன்னை சந்திக்க சந்தர்ப்பம் கிடைக்குதோ என்னவோ. என்னை சந்தோசமாய் வழியனுப்பி வை. நான் பிறருக்காக எதனையும் இழக்கத் தயாராயிருக்கிறேன், உன்னைத் தவிர. சந்தோசமாயிரு. சரி நான் போயிட்டு வாறன்'. சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். இனம் புரியாத ஒரு குருட்டு நம்பிக்கையோடு அவனை வழியனுப்பி வைத்த வசந்தி தனது வீட்டை நோக்கிச் சென்றாள்.

வீட்டில் மாமியும் மச்சான் கோபாலும் வந்திருந்தனர். மூத்த தமக்கை குசினிக்குள்ளேயே ஒளித்திருப்பதைக் கண்டதுமே விடயத்தை புரிந்து கொண்ட வசந்தி அவளைக் கேலி செய்வதன் மூலம் கடினமாகிவிட்ட தனது இதயத்தை இலேசாக்க முயன்றாள்.

மூத்த சகோதரி லலிதாவிற்கு மச்சான் கோபாலை கலியாணம் பேசி அது நடந்து முடியும் தறுவாயிலுள்ளது. கலியாண வேலைகளைப் பற்றிக் கதைக்கவே அவர்கள் வந்திருந்தனர்.

'என்ன வசந்தி உன்னைக் கனநேரமாய்க் காணேல்லை, எங்கை போனனி' கோபாலின் கேள்விக்கு அவனை கிண்டல் பண்ணும் நோக்கத்துடன் 'இல்லை கிணறொண்டைக் காவப் போனனான் அதுதான் லேட் ஆகீட்டுது.' பதில் கொடுத்தாள்.

கோபாலன் ஏழாலை என்பதற்காகவே இந்தக் கிண்டல் என்பதைப் புரிந்து கொண்ட அவன் அதற்குத் தக்க பதிலடி கொடுத்தான். 'நீ படிச்சவள் தானே, ஏழாலை கிணறு காவி எண்டால் ஏழாலையார் கிணறைக் காவினதில்லை, ஏழாலை மண் கடும் சிவப்பு. சிவப்புக்கு இன்னொரு பெயர் காவி. அந்தக் காலத்திலை கிணற்றுக் கட்டுகள் மண்ணாலைதான் கட்டுறது வழக்கம். வெளிச்சனங்கள் ஏழாலைக் கிணறு காவி நிறம் எண்டு சொல்லப் போய் அதுவே மருவி ஏழாலையார் கிணறு காவி எண்டு வந்து பிற்காலத்திலை 'மாதனமுத்தாவும் சீடர்களும்' எண்ட சிங்கள நாடோடிக் கதையோட சேர்ந்து அப்பிடி ஆகியிருக்கிறது.

இவ்வளவு காலமும் அர்த்தம் புரியாமல் அவள் கோபாலை கிண்டல் பண்ணி வந்தாள். இண்டைக்கு அதன் சரியான விளக்கம் கிடைத்து விட்டது. வெட்கிப் போனாள் வசந்தி.

தையிலை அக்காவின் கலியாணத்தை நிச்சயப்படுத்திக் கொண்டு மாமியும் மச்சானும் புறப்பட்டனர். ஆனந்தன் வெளிநாடு போவதற்கான ஆயத்தங்களைச் செய்து வந்தான். தையிலேயே அவன் வெளிநாடு புறப்படப் போவதாகக் கூறினான். அக்காவின் கலியாணம் நடக்கப் போகிறதென்பதில் அவளுக்குச் சந்தோசம். ஆனந்தன் அவளை விட்டுப் போகப் போகிறான் என்பதில் அவளுக்குக் கவலை. பின்னால் நடக்கப் போகிறவைகளை அறியாத அந்தப் பெண் மனம் காத்திருந்தது.

(தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வான்மதி நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரும் பேச்சாளருமான திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள் வான்மதிக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் இருந்து....



# விடுதலைப் புலிகளைத் தடை செய்ததில் குறுகிய அரசியற் காரணங்களே முதன்மை வகித்துள்ளன.

**கேள்வி:**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப நிலை பற்றியும் இன்றைய நிலை பற்றியும், வேறுபாடுகள்.... வளர்ச்சி...

**பதில்:**

ஆரம்ப காலத்தில் இருந்து தமிழீழப் போராட்டம் பற்றி மக்களுக்கு ஒரு தெளிவு இருந்தது. அதாவது சுதந்திரமான ஒரு தனிநாடுதான்எங்களுக்கு ஒரு தீர்வு என்பதில் உறுதியான நம்பிக்கை இருந்தது. ஆனால் பல்வேறு குழுக்கள் ஆரம்ப காலத்தில் இருந்தன. அவை அனைத்தும் தனி நாட்டைத்தான் இலட்சியமாய்க் கொண்டிருந்தன. ஆயினும் படிப்படியாக எது தனிநாட்டு இலட்சியத்தில் உறுதியான அமைப்பு என்பதை மக்கள் புரிந்து கொண்டனர். ஏனைய இயக்கங்கள் தனி நாட்டுக் கோரிக்கையை மட்டுமல்ல தமிழர்களின் அடிப்படைக் கொள்கைகளான தாயகம், தேசிய இனம், தன்னாட்சி உரிமை போன்றவற்றையும் கைவிட்டு அதிகார வர்க்கங்களிடம் சரணடைந்த வரலாற்றால் ஒரேயொரு அமைப்பு அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளே இலட்சியத்தில் உறுதியுடையவர்கள் என்பதையும் அதுவே தமக்கு விடிவைத் தரும் என்பதையும் உணர்ந்து ஆதரவளிக்கத் தொடங்கினர். இதைப் போராட்டத்தின் வளர்ச்சி என்று கூறலாம். மேலும் ஒரு புதிய நாட்டின் உருவாக்கத்திற்கு பலவிடயங்களைக் குறிப்பாகச் சொல்லலாம்.

1. நிலம்
2. பாதுகாப்பு
3. சர்வதேச ஆதரவு

இதில் நிலத்தின் பெரும்பகுதி விடுவிக்கப்பட்டு நீண்டகாலத்திற்கு ஒரு இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதும் அங்கு ஒரு அரசுக்குரிய சமூக, பொருளாதார, நீதித்துறை, நிர்வாகத்துறை என்பவற்றில் கட்டுமானங்கள் உருவாகி வருவதும் நிச்சயமாக ஒரு வளர்ச்சியை குறிக்கிறது.

பாதுகாப்பு விடயத்தில் ஒரு சிறு எண்ணிக்கையிலான கெரில்லா இராணுவம் என்ற நிலையில் இருந்து கிட்டத்தட்ட இருபதாயிரத்துக்கு மேற்பட்ட போர் வீரர்களையுடைய அமைப்பு வளர்ச்சி பெறுவது இன்னொரு பரிணாமம் ஆகும். இவ்விடயத்தில் சட்ட ஒழுங்கை சிவில் நிர்வாகத்தை பேணுவதற்கான தமிழீழ காவல்துறையும் குறிப்பிடலாம்.

1990கள் தேசிய இனங்களின் விடுதலை ஆண்டுகளாக உள்ளன. புதிய நாடுகள் உலகில் உருவாகி வருவது சர்வதேச சட்டங்களிலும், நடைமுறைகளிலும் மாற்றங்களைக் கொண்டு வருகின்றது. இருக்கின்ற ஒரு அரசுக்குள் தேசிய இனங்கள் புதிய அரசுகளை உருவாகிக்கொள்வது சர்வதேச சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் விடயமாகிவிட்டது. இந்தப் புதிய நிலைமை நிச்சயமாக தமிழீழ விடுதலைப் பேராட்டத்திற்கும் சர்வதேச அரங்கில் ஆதரவை பெருக்க உதவி செய்கின்றது.

**கேள்வி:**

தமிழீழத்தில் முஸ்லீம்களின் நிலைப்பாடு... தெளிவான முடிவான கருத்து என்ன?

**பதில்:**

முஸ்லீம்கள் தனித்த கலாச்சார பண்புடைய ஒரு மக்களாக கணிக்கப் படுகின்றனர். மத அடிப்படையிலான அவர்களுடைய தனித்துவத்தை பேணுவதற்குரிய தீர்வுகள் முஸ்லீம் மக்களை பொறுத்த வரையில் முன்வைக்கப்படவேண்டும். இவ் விடயத்தை இரண்டு வழிகளில் கையாளலாம். ஆயினும் இது தமிழீழத்துக்குட்பட்ட ஒரு உள்நாட்டுப் பிரச்சனையாகவே கையாளப்படவேண்டும். அவர்களுடைய கலாச்சாரம், கல்வி அமைப்பு, தொழில் வாய்ப்பு, நிலவுரிமை போன்றவை பாதுகாக்ககூடிய விதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லீம் தலைவர்களுக்கும் இடையிலான ஒரு பேச்சுவார்த்தையின் கீழ் விடயங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும். ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பிரித்தாளும் தந்திரத்தாலும், சூழ்ச்சியினாலும் தமிழ் முஸ்லீம் மக்களிடையே பிரிவினை அகலமாகவும், ஆழமாகவும் வளர்க்கப்படுவதைக் காணலாம். இப்போக்கு நிட்சயம் தடுக்கப்பட வேண்டும். இதனால் தமிழ் முஸ்லீம் மக்கள் தங்களுக்குள்ளே அடிபட்டுக் கொள்ளும் நிலைமையும், முஸ்லீம் ஊர்காவற் படையினால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் சொல்லப்படும் நிலைமையும், இதன் விளைவாக முஸ்லீம் மக்கள் குறிப்பிட்ட இடங்களில் இருந்து வெளியேற வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது துரதிஷ்டவசமானதே. ஒரு சுமூகமான சூழ்நிலை உருவாகும் போது, மிகவிரைவில் தமிழ், முஸ்லீம்களுக்கிடையே இப்பிரச்சனைகளை தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என நான் கருதுகிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கேள்வி:

இந்தியா விடுதலைப் புலிகளை தடை செய்தது குறித்து தங்கள் கருத்து என்ன...?

## பதில்:

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியாவில் சட்டவிரோத இயக்கமாக தடை செய்ததில் குறுகிய அரசியற் காரணங்களே முதன்மைப் பங்கை வகித்துள்ளன. தமிழக முதலமைச்சர் தனது பதவியைத் தாக்குப் பிடிப்பதில் கொண்டுள்ள பயமும், அதனடிப்படையில், இந்திய மத்திய அரசிற்குத் தனது கட்சி, முண்டு கொடுத்து வந்ததைப் பயன்படுத்தியதுமே விடுதலைப் புலிகளைத் தடைசெய்த செயல்பாட்டில் பிரதான காரணிகளாக இருந்துள்ளதை அவதானிக்கலாம். மேலும், விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துதல், தனது நாட்டில் விடுதலைப் புலிகளின் செயற்பாட்டை இல்லாதொழித்தல், சர்வதேச ரீதியில் புலிகளின் செயற்பாட்டை மழுங்கடித்தல் ஆகிய காரணங்களும் மத்திய அரசிற்கு இருந்துள்ளன. விடுதலைப் புலிகள் அமைப்பு, தமது சொந்த மண்ணிலேயே, போராட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் செய்து வருவதாலும், சர்வதேச நாடுகளுடன் நல்லுறவுகளை கட்டி வளர்த்து வருவதாலும், இந்தியாவின் இக்குறுகிய நோக்கினாலான செயல்பாடு, நீண்ட கால நோக்கில், இயற்கையான நண்பர்களான தமிழீழ மக்களை பகைவர்களாக்கும் தன்மையில், இந்தியாவிற்கே தீமை பயப்பதாகும்.

### சிகரெட்



மனிதன் வாழ்வதற்காய் பிறக்கின்ற காலமதில் அவன் வாழ்வை அழிப்பதற்காக தோன்றுகின்ற காலனைப் போல் சிறுகச் சிறுக அவன் சுவாசமதில் தான் புகுந்து காசம் எனும் கொடு நோயில் தானவனைச் சிக்க வைத்து மெதுமெதுவாய் அவனுடைலைச் சித்திரவதை தான் செய்து அவனுயிரை பலியெடுக்கும் துஷ்டனே சிகரெட்டே!

காசைக் கரியாக்கி சிகரெட்தான் வாங்கி அதனால் வரும் கேடுதனை சிறிதளவும் உணராது சிலநிமிட போதைக்காய் ருசிக்கின்ற மனிதர்கள், சிகரெட் சிறுதுளியாய் எரிந்து சாம்பல் ஆவது போல் தானும் அதன் பிடியில் 'பிடிசாம்பல் ஆவதனை உணராது வாழும் மூடர்கள் உள்ளவரை சிகரெட்டின் ஆதிக்கம் அழியவே அழியாது.

- மைதிலி தம்பிமுத்து -

## கேள்வி:

தமிழக அரசியல் களத்தில் ஜெயலலிதாவின் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகள் குறித்து..........?

## பதில்:

ஜெயலலிதாவின் செயற்பாடுகள் குறுகிய அரசியல் இலாபத்துக்கானதும், மேலெழுந்தவாரியான, நுனிப்புல் மேய்கின்ற செயலாகவும் காணப்படுகிறது. தமிழீழ மக்களையும் தமிழ் நாட்டு மக்களையும் பிரிப்பதற்கு ஜெயலலிதா எடுக்கும் முயற்சி எதிர் நீச்சல் மட்டுமல்ல, எதிர் விளைவுகளையும் தரவல்லதுமாகும். ஜெயலலிதா நினைப்பதற்கு மாறாக அவருடைய விடுதலைப் புலிகளுக்கெதிரான ஒவ்வொரு செயற்பாடும் தமிழக மக்களிடையே விடுதலைப் புலிகளுக்கு மேலும் உறுதியான ஆதரவை பெருக்குவதையே காண்கிறோம். மேலும் ஜனநாயக ரீதியான தமிழ் நாட்டு மக்களின் உண்மையான வெளிப்பாடுகளை வன்முறை மூலம் அடக்க முற்படுவது ஜனநாயகத்தின் கதவுகளை மூடி மக்களிடையே வன்முறைக்கு தூபமிடும் செயலாக பரிணமிக்கும்.

## கேள்வி:

இலங்கை அரசுடனான சமாதான பேச்சுக்கள் எந்த அளவில் உள்ளன?

## பதில்:

விடுதலைப் புலிகள் சிறீலங்கா அரசுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடாத்தி தமிழ் தேசிய பிரச்சனைக்கு தீர்வு ஒன்றை காண விரும்புகின்றனர். இப் பேச்சுவார்த்தையில் சர்வதேச நாடுகளோ அல்லது அமைப்புகளோ மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் சிறிலங்கா அரசைப் பொறுத்தவரை ஒரு இராணுவ தீர்வு காணும் முயற்சியில் சமாதான செயற்பாடுகளை கருவியாகப் பயன்படுத்துகின்றது. சிங்கள மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக உருவான தனது ஒற்றை ஆட்சி அமைப்பினுள் தமிழீழ தாயகப் பகுதிகளைத் துண்டாடி இராணுவ அழுத்தத்தின் மூலம் தன் மேலாதிக்கத்துக்கு சாதகமான தீர்வொன்றை தமிழ் மக்கள் மேல் திணிக்க எண்ணுகிறது. இம் முயற்சிக்கு ஆதரவான அரசியல் செயல்பாடுகளாகவே சர்வகட்சி மாநாடு, பாராளுமன்ற தெரிவுக் குழு ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. சிறிலங்காவின் ஒற்றை ஆட்சியினுள் ஒரு தீர்வினை காணமுடியாது என்பது எமது தீவில் வாழும் மக்களாலும், சர்வதேச சமூகத்தாலும் சிறிலங்கா அரசுக்கு உணர்த்தப்பட்டலே ஒழிய சமாதான தீர்வுக்கான நகர்வு முன்னேறாது. அதற்கு மாறாக போர் தொடருவதோடு சமாதான முயற்சிகளுக்குப் பின்னடைவுகளே ஏற்படும்.

## கேள்வி:

சமாதானத் தீர்வொன்றை வறியுறுத்துமுகமாக யாழ்ப்பாணஞ் சென்று திரும்பியுள்ள பிக்குமாரின் மனோநிலை மாற்றங் குறித்தும் அவர்களது நடவடிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைகள் எந்த அளவில் அமைய வேண்டுமென்பது குறித்தும் தங்களது கருத்துக்களென்ன?

## பதில்:

சிறிலங்காவின் இராணுவத்தீர்வு முயற்சி வெற்றி பெறாதென்பதையும் விடுதலைப் புலிகளுடன் சமாதானமாகப் பேசித் தீர்க்க வேண்டுமென்பதையும், வலியுறுத்துவதில் சிங்கள தேசத்திலுள்ள சமூக, மத அமைப்புக்கள் எடுக்கும் பங்கில் இப்பௌத்த பிக்குகளின் யாழ் வருகையும் ஒரு குறிப்பிட்ட அம்சமாகும். ஆயினும் இப்பௌத்த பிக்குகளின் முயற்சி தமிழீழ மக்களின் அடிப்படை வரையறைகளை ஏற்றுக்கொள்ளாதவிடத்து, வீண்முயற்சியாகவும், அரசாங்கத்திற்கு சாதகமாகவும் போய்விடும் ஆபத்து உண்டு. 'இலங்கைத் தீவு சகல இன மக்களுக்குஞ் சொந்தமென்று கூறுவது பெரும்பான்மை சிங்கள மக்களின் மேலாதிக்கதை வேறு வழியில் நிலை நிறுத்துவதென்பதாகும்.' பௌத்த பிக்குகளும் அரசியல் சாணக்கியர்களாக வளர்ந்து வருகிறார்களென்பதையே பௌத்த பிக்குகளின் இந்த உள் நோக்கமான அணுகுமுறை காட்டுகின்றது.

## கேள்வி:

ஐரோப்பாவில் வாழும் தமிழ் மக்களின் சிந்தனை, செயல்களில் ஏற்பட்டு வரும் பாரிய மாற்றங்கள் குறித்துத் தங்கள் கருத்தென்ன?

## பதில்:

இதனை இரண்டு வகையாகக் குறிப்பிடலாம். 1) கலாச்சார மாற்றங்கள், அதாவது, இது ஐரோப்பியக் கலாச்சாரத் தாக்கத்தினால் ஏற்படுவது 2) தமிழீழப் போராட்டத்தின் தாக்கத்தினால் புலம் பெயர்ந்து, வெளிநாடுகளில் வாழும் மக்களும் ஒரு தன்மானமுள்ள, வீரமுடைய மக்களாக உருப்பெற்று வருவது. கலாச்சார மாற்றங்களில் அமிழ்ந்து போகாமல் தமிழ் மக்கள் தங்கள் தனித்துவத்தைப் பாதுகாத்துக்கொள்வது அவசியமென்று கருதுகிறேன். இங்கு மேற்கு நாடுகளில் 'நவபாசிசம்' வளர்ந்து வருகின்ற நிலையில் எமது மக்கள் இங்குள்ள முன்னேற்றங்களையும், நவீன தொழில் நுட்பங்களையும், நல்ல கலாச்சாரப் பண்புகளையும் தமக்குரியதாக்கி தங்களுடைய பூரண விடுதலை தமிழீழ மண்ணில்தான் என்கின்ற உணர்வோடு செயற்படவேண்டும். தனித்துவமும், தன்மானமும் தமிழீழத்தின் உருவாக்கத்திற்கு உதவவேண்டுமென்று எண்ணுகிறேன்.

## கேள்வி:


வான்மதி பற்றிய உங்கள் கருத்து... வான்மதியின் ஆக்கங்கள்.. செயற்பாடகள் குறித்து..

## பதில்:

இளைஞர்களின் உற்சாகத்தையும், உணர்வையும் பாராட்டுகிறேன். தரமான பத்திரிகையாக வளர்ந்து அறிவியலின் ஆதாரத்தில் மூடக்கொள்கைகளைச் சாடவேண்டும். தமிழீழ தேசிய விடுதலையை அடிப்படையாக்கி மக்களைத் தகுதியான, தரமானவர்களாக வளர்க்க வழிகாட்டியாக இருக்க வேண்டும். உங்கள் முதல் வெளியீட்டில் குறிப்பிட்டிருந்தபடி இளைஞர்களினதும், சிறுவர்களினதும், முயற்சிக்கு 'வானம் தான் எல்லை' ஆக இருக்க வேண்டும். எனவே, வானமதி நீண்டகாலம் தனது சேவையை குறிப்பாக, சிறுவர், சிறுமியர், இளைஞர், யுவதிகளுக்கு வழங்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

சந்திப்பு:- ரமேஷ்

தொகுப்பு:- அ. இரட்ணகாந்தன்




சரசு:- என்ர மோனுக்கு வாறமாசம் கலியாணம்.

பொன்னம்மா:- என்ன சீதனம் வாங்கிறியள்?

சரசு:- என்ர மோனுக்கு ஷெல்லடிச் சத்தத்தாலை காது கேக்காது. அதால ஒரு செவிட்டு மெஷின் தரியினமாம்.

- கெ. யெறோன் -



ஒரு பருந்து:- அங்க பார் 'யவ்னா' பக்கம் ஒரே புகைமண்டலமாய் இருக்கு.


மற்றப் பருந்து:- அதெல்லாம் எங்கடை 'சகடையாற்ற' விளையாட்டுத்தான்.

- கே. யீனோ -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மதி(யூக) பதில்கள்

■ **வான்மதி தொடருமா? இடையில் மறைந்து விடுமா?**

திருமதி. மலர் ஜோசப் ராஜசிங்கம்
கனடா.

தங்களைப் போன்ற வாசகர்கள் உள்ளவரை வாழும்.

■ **பாக்யாவில் ஆசிரியர் பாக்கியராஜா போல் பதிலளிக்க உம்மால் முடியுமா?**

சு. சிவகுமார்
பாரிஸ் 18.

முடியும், முடியும், முடியும் ஆனால் இலங்கைத் தமிழில், இனிய தமிழில்.

■ **உமது ஆசிரியர்களில் ஒருவரான பாலன் மதங்களை எதிர்க்கின்றாரே! அது வான்மதியின் கொள்கைகளில் ஒன்றா?**

அமிர்தகுணராஜ்
பாரிஸ் 18.

நிச்சயமாக இல்லை. மூன்றாவது வான்மதியில் சோதிடர் சண்மாஸ்டரின் கட்டுரைகள் வெளிவருகின்றன. வாசித்துப்பாரும்.

■ **விடுதலைப் பாதையில்........ திரைப்படத்தை நானும் பார்த்தேன். அதில் பெரிதாக எதுவுமே இல்லை. உமது விமர்சகர் வெனோ ஆகா, ஓகோ என்று எழுதியுள்ளாரே வான்மதி என்ன வால்மதியா?**

ரவி
சார்சல்.

ஐயா ரவி, அப்படி எண்ணி விடாதையும். ஞானம் பீரிஸ் என்ற தனிப்பட்ட மனிதரின் முயற்சியை பாராட்டினோம். குறைகளையும் சுட்டிக்காட்டியிருந்தோம். நீர் பணம் போட்டு படம் எடுத்திருந்தால் தான் தெரியும்.

■ **வான்மதியின் பின்னால் பெரியதொரு கை இயங்குகிறது என்று வதந்தி அடிபடுகிறதே உண்மையா?**

வினோதன்
சார்சல்.

பதில் எழுதும் பொழுது பின்னால் திரும்பிப் பார்த்தேன், வீட்டு அலுமாரிதான் தெரிந்தது. வான்மதி வெளியீட்டு விழாவில் தலைவியின் பேச்சை நீர் கேட்கவில்லைப் போலும்.

■ **வான்மதிக்கு எனது கடிதம் தான் முதற் கடிதம் என்று நினைக்கிறேன் அப்படித்தானே?**

கஜன்
பாரிஸ் 17.

ஏமாந்துவிட்டீர், *Saint Denis* புஸ்பம் முந்திவிட்டார்.

## கண்ணீர் அஞ்சலிகள்.



**செல்வன் மருதப்பு யோகேஸ்வரன்**
**(குட்டி, கண்ணன்)**

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 23. 08. 1969 | 08. 04. 1989 |

**கண்ணன் என்ற உன் நாமம் கேட்டிட**
**காதெல்லாம் இனிக்குதையா**
**குட்டி என்று உன் பெயர் கூறிட**
**குவலயமே கண்ணீர் சிந்துதையா.**

-திரு. திருமதி. புலேந்திரன்
மற்றும் உறவினர் நண்பர்கள்
பாரீஸ். பிரான்ஸ்.

## கண்ணீர் அஞ்சலிகள்



**திருமதி மகேஸ்வரி பிரான்சிஸ் சேவியர்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24-05-1944 | 03-04-1992 |

**கூண்டை விட்டு சிறகடித்ததம்மா**
**ஒரு கிளி, வானை நோக்கி**
**இங்கு - உன் செல்லக்கிளிகள்**
**வாடுதம்மா உன்னை நினைத்து.**

வான்மதி குடும்பத்தினர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கவிதைப் பூங்கா

## அன்புத் தமிழா

அன்புத் தமிழா - நீ
அழாதே
உன்இதயத்திற்குள்
இருட்டி விட்டதா
இருட்டினாலும்
எரியும் விளக்கை
ஏற்றி வை.
உன் இதயக் கடல்
கொந்தளித்தாலும்
எரியும் விளக்கை மட்டும்
அணைய விடாதே.
உன் இதயப் பூமிக்குள்
புயலடித்தாலும் எரியும் விளக்கை
மட்டும் அணைய விடாதே.
உன் இதயப் பூந்தோட்டம்
கருகியிருந்தாலும்
கவலை கொள்ளாதே
சுதந்திர மழையில் - அவை
மீண்டும் துளிர்க்கும்.
இரவு இரவாக இருந்ததில்லை
அது விடியும்
அப்பொழுது
தமிழீழ வானில்
சிங்கள விமானங்கள் முழங்காது
தமிழ் ஓசை மட்டும் கேட்கும்.
அப்போது
தமிழீழத்தாய்
தன் குழந்தைக்கு
தமிழீழ வானத்து
நிலாக்காட்டி
சோறூட்டி
தாலாட்டுவாள்.

மீசாலையூர் சுதந்திரன்

## தண்டிக்கப்படும் நியாயங்கள்

காலமகள் மணலெடுத்து
கோலமிட்ட கடற்புறத்தில்
முற்போக்கு கவியொருவன்

முன்னே விரிந்த கடலையும்
அதன் பின்னே
பரந்த விண்ணையும்
விண்ணுக்கு அப்பாலே
விழி தொடர
விரக்தியுடன் நிற்கின்றான்...

அவன் முன்னே
வறுமை...
அவன் உள்ளே
நேர்மை...
அவனோ இன்று
வெறுமை...
அவன் பின்னே
இருவர் - கையில்
இயந்திரத் துப்பாக்கி சகிதம்...

தென்னை ஓலை வேலி
தள்ளி ஒரு சிறு குடிசை...
சிறு குடிசைக்குள்ளே
துப்பாக்கித் தாலாட்டில்
சிறு குழந்தையின்
தூக்கமொன்று...

விடுதலை பெறுவோமென்று
துணிந்துவிட்ட வீரர்களின்
தியாகங்களை மாசுபடுத்த முனையும்
வெட்டியர்களின் காலமிது.
வெடி குண்டுகளின் வாசம்
தரைக்காற்று சுமந்து வரும்
மனிதகுல நேசம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துப்பாக்கிகள் சுமந்து நிற்கும்...

காற்றோ பெருங்காற்று
காற்றோடு கும்மிருட்டு
கும்மிருட்டு குலை நடுங்க
குடிசைக்குள்ளே ஓர் வேட்டுச் சத்தம்...

ஆயுதம் ஏந்தும்
வெட்டியெர்களெல்லாம்
விடுதலை வீரர்கள்
என்னும் காலமிது...

நியாயத்தைக்
கவிவடித்த
நேர்மையான
கவிஞனுக்கும் - அவன்
குடும்பத்துக்கும்
மரண தண்டனை இன்று
என்று - வெட்டியர்கள்
தலைவனின் கட்டளையொன்று...

இட்டது சட்டமென்று
இடித்துரைக்கும் கூட்டமொன்று
எதிர்ப்போரை அழிப்பதென்று
கங்கணம் கட்டித் திரிகின்றது.

வாய்க்கொரு பூட்டும்
கைகளுக்கு விலங்கும்
மிஞ்சினால்
அவர்களுக்கு யமனாகவும்
மாறும் இவர்களால்
மக்கள் இதயத்தில்
ஆணி வேராக
ஆழப் பதிந்த
ஓலைச் சுவடிகளென
தெரியாத வெட்டியர்கள்
இவர்கள்...
திரைகடலோடி
திரவியம் தேடுவோரையே -
கப்பம் கட்டாவிடில்
திரைமறைவில்
தீர்த்துக்கட்டும்
வெட்டியர்களின் காலமிது.

- கணேஷ்ராஜ் -

# ஒரு தலை காதல்

நான் கொண்ட காதல்
ஒரு தலைக் காதல்
நான்காண்டு கழிந்த
கற்பனைக் காதல்.

அழகினில் வந்த
அருமைக் காதல்
ஆசையில் தோன்றிய
ஆரம்பக் காதல்.

பருவத்தில் உருவான
பசுமைக் காதல்
பார்த்தவுடன் கொண்ட
பாசமுள்ள காதல்.

ஆழ்கடல் கடந்த
அன்புக் காதல்
ஆகாயத்தில் பறந்த
அதிசயக் காதல்.

இதயத்தில் இருக்கும்
இன்பமான காதல்
ஈழத்தில் உருவான
இனிமையான காதல்.

மலர்களைப் போன்ற
மாசில்லாக் காதல்
மாலை சூட ஏங்கி
காத்திருக்கும் காதல்.

களங்கமில்லா
கன்னிக் காதல் கரும்பைப் போன்ற
சுவையுள்ள காதல்.

மனதினில் உள்ள
மயக்கமான காதல்
வார்த்தைகள் இல்லா
வறுமைக் காதல்.

உணர்ச்சி உள்ள
உன்னதக் காதல்
உறவினைக் கொண்ட
உரிமைக் காதல்.

துன்பத்தில் வந்த
தூய்மையான காதல்
இறப்பு வந்தாலும்
அழியாக் காதல்.

பதிலைக் காண
துடிக்கும் காதல்
அவளுடன் வாழாவிடில்
உயிர்விடும் காதல்.

- ராஜா -

www.tamilarangam.net

# கரு ஒன்று கதையான போது

காட்டு மிராண்டியாக நாளைய பொழுதை அறியாதவனாக மனிதன் வாழ்ந்த சந்தர்ப்பத்தில் எதைப்பற்றியும் அவனுக்கு சிந்திக்க வேண்டிய தேவை இருந்ததில்லை. கணப் பொழுதில் பல இலட்சங்களைப் பெருக்கியும் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தியும் சாதனைகளைப் படைத்தும் வரும் நவீன மனிதன் நீண்ட தூரம் சிந்திக்க வேண்டியவனாகின்றான். கலையுலகும் அவ்வாறே. கதாசிரியர்கள் கற்பனைகளை கொட்டிக் குவிக்க நடிகர்கள் நடிக்க பாடகர்கள் பாட திரைப்படமொன்று உருவாகிய காலம் முடிந்து விட்டது. இன்று நீண்ட தூரம் சிந்தித்து செயலாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.



வான்மதி கலையகத்தின் புதிய பறவைகளும் அவ்வாறே. நாடு நகரிழந்து வீடிழந்து அன்னை தந்தையை இழந்து கொண்ட மனைவியையும் கட்டிய கணவனையும் நற் செல்வங்களையும் உற்ற பல நண்பர்களையும் பறி கொடுத்து நாற்திசையிலும் சிதறி விட்ட போதிலும் எம் கலையும் கலாச்சாரமும் தமிழும் அதன் தனித்தன்மையும் எம்மிடமிருந்து எள்ளளவும் சிதறி விடவில்லை. முடியாது, முடியவும் கூடாது.

புதிய பறவைகளைப் பற்றிப் பேசுமுன் பிறந்தது முதல் கொண்டு இக் கட்டுரை அச்சேறும் வரை எனது 21 வருட கால இவ்வுலக வாழ்க்கையில் எனது கலை வாழ்வைப் பற்றியும் அதன் வெற்றி தோல்வி பிரதிபலிப்புகளைப் பற்றியும் சிறிது எண்ணிப் பார்க்க விளைகிறேன்.

'கலை' என்கின்ற கல்விச் சாலையில் மணலிலே அ, ஆ எழுதிப் பழகும் கடை நிலை மாணவன் நான். தமிழ்க்கலையுலகம் எத்தனையோ பல மேதைகளையும், அறிஞர்களையும், புலவர்களையும் கண்டது. கண்டு கொண்டிருக்கின்றது.

மேடை நாடகங்களை எழுத வேண்டும் நடிக்க வேண்டும் என்கின்ற எனது ஆவல் எனக்கு 1983ம் ஆண்டில் பதின்மூன்றாவது வயது முதல் ஏற்பட்டிருந்தது. பல நாடகங்களை நான் பார்த்திருக்கின்றேன். அரச நாடகங்களில் பண்டார வன்னியனும் காத்தவராஜன் கூத்தும் என்கண்முன் பிரதிபலித்துக் கொண்டிருந்ததன் விளைவு பாடசாலை பரிசளிப்பு விழாவுக்கு எனது வசனம், இயக்கத்தில் பைபிள் கதைகளில் இருந்து 'சின்னவன் வென்றான்' நாடகம் உருவாகியது. தாவீது ஆக நானே நடித்தேன்.

மேடைப்பயம், கோலியாத் வசனம் பேசு முன்பே அவன் மீது கவணெறிந்து நாடகத்தை இரண்டே நிமிடங்களில் முடித்து சாதனை புரிந்து வகுப்பாசிரியரிடம் ஏச்சுக்களை வாங்கிக் கட்டிக் கொண்டேன். மேடைப் பழக்கம் எனக்கு முன்பு



இல்லாமலில்லை. குறைந்தது 50க்கு கிட்ட மேடைப் பேச்சுக்களை நிகழ்த்தி பல பரிசுகளைப் பெற்றுக் குவித்து வைத்திருந்தும், குழந்தைப் பருவத்துக்கே உரிய விளையாட்டுத் தனம்; முதல் நாடகம் என்கிற பயம் என்னைக் குழப்பி விட்டது. ஆனாலும் ஆசிரியை திருமதி. அன்னலட்சுமி பொன்னுச்சாமி எனது அந்த முயற்சியை ஆலமரமொன்று முளைவிடத் தொடங்குகின்றது. என்று ஏனைய ஆசிரியர்களிடம் என்னைப் பற்றிப் பேசியது எனக்கு உற்சாகமூட்டியது.

இரண்டாவது தடவையாக செல்வரத்தினம் மாஸ்டர் 'சுந்தரர் திருமணம்' நாடகத்தில் சபையோர்களில் ஒருவராக எனக்கு 2 வசனங்களும் தந்து பயிற்றுவித்தார். ஆனால் பாடசாலை விழாவில் நாடகம் மேடையேறிய போது என்னுடைய இடத்தில் வேறொரு மாணவர் நடித்தார். நான் ஒதுக்கப் பட்டேன். மீண்டும் ஏழாலை மாதர் சங்கத்தின் நவராத்திரி விழாவுக்காக 'திருந்திய உள்ளங்கள்' நாடகம் வீ. கோபாலசுந்தரம் என்பவர் என்னையொத்த பல சிறுவர் சிறுமியர்களுடன் என்னையும் நடிக்க வைத்து மேடையேற்றினார். அதில் நான் இரண்டு பாத்திரங்களில் நடித்தேன். அதே திருந்திய உள்ளங்கள் நாட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கத்தினையே ஒரு சில பெரிய மாற்றங்களுடன் எனது பாணியில் எழுதி 1988 ம் ஆண்டில் சண்டிலிப்பாய் கலைமகள் கல்வி நி..ய ஆண்டு விழாவில் நிலைய மாணவர்களைக் கொண்டு 'மீண்டும் ஒரு பாரதி' எனும் தலைப்பில் மேடையேற்றியதுடன் 1990ல் பாரிசில் பாரிஸ் தமிழர் கல்வி நிலையத்தின் நவராத்திரி விழாவுக்காக தமிழ்ப் பிரிவு மாணவர்களுக்கும் பயிற்றுவித்தேன். இறுதியில் பாரதியாக நடிக்க வேண்டிய மாணவன் தகராறு செய்ததால் விழாவில் நானே பாரதியாராகவும் நடித்தேன். பாடல்களை தெய்வேந்திரமும் மோகனதாசும் பாடினர். அன்றைய விழாவில் அந்நாடகத்தைப் பற்றி திரு. காராளபிள்ளையவர்கள் பேசும் போது இன்று நான் கண்ட இந்த இளைய ஆசிரியர் சாதி, பெண்ணடிமை மனத்துணிவு பற்றி ஐந்து ஆறு மணித்தியாலங்கள் மேடைகளில் பேச வேண்டிய விடயத்தை ஐந்தே நிமிடங்களில் எமக்கு விளங்க வைத்துவிட்டார், இளைய தலைமுறை கிளர்ந்தெழுகிறது எனப்பாராட்டினார். அதே நாடகம் மீண்டும் 'புதிய பாரதி' எனும் தலைப்பில் பாரீஸ் வீடியோ மலரின் 2வது இதழிலும் இடம் பெற்றது. அது பற்றி பாரிஸ் ஈழநாடு பத்திரிகையில் திரு. கி. கிறிஸ்ரியன் விமர்சனம் எழுதுகையில் பாரதியாரை நடனமாடுபவராக காட்டியிருப்பது தவறு எனச் சுட்டிக்காட்டியிருந்தார். வீடியோ நாடகத்தில் பாரதியாராக நடித்த எனது சகோதரன் குணரூபன் கண்ணாடி அணிந்து காலில் செருப்புடன் பாரதியாரின் அம்சமாக அவரது கருத்துக்களைப் பிரதிபலித்தே நடித்தார் ஒளிய பாரதியாராக அல்ல. அத்துடன் காட்சியின் படி சிறுவர்களுக்கு ஆலோசனை சொல்பவராக சிறுவர்களின் இயல்புக்கேற்றவாறே ஆடிப்பாடி நடித்தார். கருத்துக்கள் இலகுவில் மக்களை சென்றடைய வேண்டுமெனில் காட்சிகளை அவர்களைக்கவரும் வகையிலேயே அமைக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

இலங்கைக்கு மீண்டும் செல்வோம். 1985ம் ஆண்டில் கட்டுவன் பாரதி சனசமூக நிலைய அபிவிருத்தி நிதிக்காக நாடக விழா நடந்த போது இந்து மாணவர் இளைஞர் பேரவையாக ஒன்றிணைந்திருந்த நான் உட்பட வேறுபல இளைஞர்களும் அவர்களுக்காக நாடகம் ஒன்றைதயாரிக்க முன் வந்தவேளை 'சூறாவளி' நாடகம் என்னால் உருவாக்கப்பட்டது. தான் அன்பு வைத்திருந்த தங்கையை தன்மீது ஏற்பட்ட தனிப்பட்ட விரோதத்திற்காக கொலை செய்த கொடியவனையும் அவனது நண்பனையும் கதாநாயகன் பழி வாங்குவதே கதை, கதாநாயகனின் காதலி, அவனுக்காக தியாகம் புரியும் நண்பன், ஏமாற்றும் நண்பன். சந்தர்ப்ப சூழ் நிலைகளால் வில்லனிடம் அடிமைப்பட்டிருக்கும் குடியானவன் ஒருவன் எனப் பல கிளைப்பாத்திரங்களுடன் ஒரு மணிநேரம் இடம் பெறக் கூடிய வகையில் முழுக்க முழுக்க சினிமாப் பாணியில் கதைக்கேற்ற சினிமாப் பாடல்களுடனும் நாடகம் அமைந்தது. சினிமா என்றால் என்ன? நாடகம் என்றால் என்ன? என்ற மயக்க நிலை தெளிவடையாத, அறிவு வளராத நிலையில் உருவான நாடகம் என்றே அதைக் கூறலாம். இது தனிப்பட்ட எனது பிழை அல்ல. என்னிலும் விட பல மடங்கு நாடக அனுபவமும் அறிவும் பெற்ற பலரின் நாடகங்களைப் பார்த்துவிட்டு அவர்கள் செய்த பிழையையே நானும் செய்தேன். ஏனெனில் அவர்கள்தானே இளம் கதாசிரியர்கள் கலைஞர்களாகிய எமக்கு ஆசிரியர்கள், வழிகாட்டிகள்.

எனது 4வது நாடகம் 'விதியின் வழியினிலே...' சிறுபிள்ளையின் கிறுக்குத் தனமும் மக்களால் விரும்பி வரவேற்கப்பட்டது என்றால் அதற்கு இது உதாரணம். அதுபற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

- ரமேஷ் -

விரைவான சேவை, விதம் விதமான உத்திகள்
விரைந்து தொடர்பு கொள்ளுங்கள்
விரும்பும் வகையில் 'மிக்சர்' லென்சுகள்
இன்னும் பல புதிய சாதனங்களுடன்,

திருமணம், பிறந்தநாள், மங்கள வைபவங்கள் பொது நிகழ்ச்சிகளுக்கும்

வி. பி. லோட்ஸ்
வீடியோ விஷன்

COMPUTER முறையில் EDITING
TITLE வேலைகளிற்கும்
வீடியோப் படங்கள் வாடகைக்கு பெறவும்

V.B. LORDS VIDEO VISION

Tel: 39 93 11 37

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மகளிர் அரங்கம்

தொகுப்பு:- நீலாட்சி சிவசுப்பிரமணியம்.

மாதராய்ப் பிறந்திடவே நாம் மாதவம் செய்திடல் வேண்டுமென்பது புரட்சிக் கவி பாரதியின் வாக்காகும். மகளிர்களாகிய நாம் எப்படிப் பிறந்தோம், எப்படி வளர்ந்தோம், இன்று எப்படியான சூழ்நிலையில் வாழ்கின்றோமென்று சிந்திக்க வேண்டியது அவசியம்.

தாயின் நற்பழக்க வழக்கங்களையும், தந்தையின் கல்வியறிவையும் பெற்று, பொறுமையெனும் நடை பயின்று, வாழ்க்கைக் கடலில் பெரும் புயல் வீசினாலும் இன்முகத்துடன் எதிர்நீச்சல் போட்டு வெற்றியுடன் கரையேறும் மனப்பக்குவம் கொண்டவர்களாக பெண்கள் மிளிர வேண்டும். சிந்தனைகளைச் சிதறவிடாது கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடனும் தம் உரிமைகளை வென்றெடுக்க அவர்கள் போராடவேண்டும்.

அகப்பை தூக்கிய கரங்கள் இன்று ஆயுதந் தாங்கியிருப்பது தமிழ்ப் பெண்கள் காலங்காலமாக சிறைப்பட்டிருந்த மரபுரீதியான அடிமைத்தளைகளை அறுத்தெறிந்து, தம் ஆழ்மையான உணர்வுகளை உலக அரங்கில் வெளிப்படுத்தத் துணிந்துவிட்டார்கள் என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

வான்மதியின் இப்பகுதி பெண்கள் முன்னேற்றத்தினைக் கருத்திற்கொண்டும், புதிய எமக்கு ஒவ்வாத போலி ஐரோப்பிய நாகரீகங்களின் மாய வலையில் எமது இளைய பெண் சமுதாயம் சிக்கிக் கொள்ளக்கூடாது என்னும் நோக்கோடும் சமூக கலாச்சாரங்களையும் முற்போக்குச் சிந்தனைகளையும் வளர்க்கவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே உங்கள் எண்ணங்களையும், கருத்துக்களையும் எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

மகளிர் அரங்கினை சிறப்பிப்பதும், அதன் பக்கங்களை அதிகரிப்பதும் உங்கள் கரங்களிலேயே தங்கியுள்ளது.

முகவரி:
மகளிர் அரங்கம்
VANMATHY
c/o SIVARUBAN
13, Rue des PEUPLIERS,
95140 Garges les Gonesse, France.

## சமைத்துப் பாருங்கள்

# பால் கொழுக்கட்டை

### செய்பொருட்கள்

500 கிராம் வறுத்த அரிசிமா, 5 மேசைக்கரண்டி சீனி, 1 1/2 தேங்காய்த் துருவல், ஏலப்பொடி சிறிது, உப்பு போதுமான அளவு, எண்ணெய் தேவையான அளவு.

**செய்முறை:-** மாவில் உப்புக் கலந்து கொதித்த நீரை விட்டு, சிறிது எண்ணெய் சேர்த்து இடியப்பம் போல் பிசையவும். பிசைந்த மாவை 3 பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிகளையும் 1/4 அங்குல தடிப்புள்ள ரொட்டிகளாகத் தட்டவும்.

தட்டிய ரொட்டிகளை எண்ணெய் பூசிய இடியப்பத் தட்டில் வைத்து அவித்து எடுத்து சிறிய சதுர துண்டுகளாக வெட்டி வைக்கவும். தேங்காய் துருவலை பிழிந்து 1 டின் அளவு பால் எடுத்து, சீனியும் உப்புங் கலந்து கொதிக்க வைக்கவும். பால் சிறிது வற்றியவுடன் வெட்டி வைத்த மா தட்டைகளை வற்றிய பாலில் கொட்டி ஏலக்காய்த் தூளையும் தூவி கிளறி ஆறவைத்து பின்னர் பரிமாறவும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

■ வான்மதி நூல் வெளியீட்டு விழா AGECA மண்டபத்தில் (177, Rue de CHARONNE, 75011 PARIS. )ல் மிகவும் கோலாகலாமாக கொண்டாடப் பட்டது. திருமதி. ப. பாலசிங்கம் பிரதமவிருந் தினராகவும் திரு. லோறன்ஸ் திலகர், திரு. காராளபிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்க ளாகவும் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர். பட்டிமன்றம், நாட்டியம், நாடகம் ஆகியவற்று டன் இளையநிலா, சுபஸ்வரம் இசைக் குழுக்க ளின் இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.





■ தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக்கிளை யினர் ஒழுங்கு செய்த மேதின ஊர்வலம் PLACE DE LA REPUBLIQUEல் ஆரம்பமாகி நடைபெற்றது. ஆயி ரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடிநின்று கோசங்கள் எழுப்பிய வண்ணம் ஊர்வலமாகச் சென்றனர். விடுதலையுணர்வை பிரதிபலிக்கக் கூடிய காவடி யாட்டமும் இடம் பெற்றது.

■ பிரெஞ்சு-தமிழ் கல்வி நிலையத்தினர் நடத்திய நிகழ்ச்சி MARAICHERS ல் நடைபெற்றது. நாடகம், நகைச்சுவை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள் என் பன இடம் பெற்றன.

- வான்குருவி -


# நிஷா ரெலிமூவி

* திருமண வைபவங்கள்
* பிறந்ததின விழாக்கள்
* பொதுநிகழ்ச்சிகள்
* வீடியோ திரைப்படங்கள்

அனைத்திற்கும் சிறந்த முறையில் ஒளிப்பதிவு செய்திட

NISHA

TELE MOVIE

தொடர்புகளுக்கு:-

M. GUNARAJA

TEL: 39 86 53 51

www.tamilarangam.net

## சிறுவர் பக்கம்



# பூந்தளிர்கள்

தொகுத்தளிப்பவர் - மதி மாமாவுடன்
செல்வி. துஷ்யந்தி மகேந்திரராஜா



எமது தாய்மொழி தமிழ். இனிமை நிறைந்த மொழி. இலங்கை, இந்தியா, மலேசியா, பர்மா, சிங்கப்பூர், மொறீசியஸ் தீவுகள் மற்றும் ஐரோப்பா எங்கும் தமிழர் பரந்து வாழ்கின்றனர். தமிழ்ப் பெண்ணாகப் பிறந்ததற்காக நான் பெருமைப் படுகின்றேன். எனது நாட்டையும் தாய் மொழியையும் நான் நேசிக்கின்றேன்.

அ. விஜயந்தி

# திரும்பிப்பார்

- த. செல்வகரன் -

சங்கருக்கு உறவினர்கள் யாருமேயில்லை. வீதியில் அனாதையாக நின்ற அவனை அன்போடு அழைத்துச் சென்று தன் சொந்த மகனாகவே வளர்த்து வந்தார் கதிர்காமர். ஆனால் கதிர்காமரின் மனைவி பாக்கியமலருக்கு சங்கரைக் கண்டாலே பிடிக்கவில்லை. தன் மகள் பவானியை விட சங்கர் நன்றாகப் படிப்பதும் திறமைசாலியாக இருப்பதுவுமே பாக்கியமலர் சங்கரை வெறுக்கக் காரணமாயிருந்தது.

கலவரத்தில் சிங்கள வெறியர்களால் தாய், தந்தையரை இழந்து விட்ட அவனைத் தன் சொந்த மகனாகப் பாசமுடன் வளர்த்துவந்த கதிர்காமருக்கும் மனைவிக்கும் இடையில் அடிக்கடி சண்டை ஏற்பட்டு அதன் விளைவாக ஒருநாள் சங்கரும் கதிர்காமரும் வீட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனாலும் கதிர்காமர் சங்கரை செம்மையாக வளர்த்தார். படித்துப் பட்டதாரியாகிய அவன் உயர் கல்வி கற்க லண்டன் சென்று அங்கேயே வேலையும் தேடிக் கொண்டான்.

ஐந்து வருடங்களுக்குப் பிறகு தன்னை வளர்த்த தந்தையைப் பார்க்க அவன் இலங்கைக்கு வந்தான். தான் விட்ட பிழைகளை உணர்ந்த பாக்கியமலர், கதிர்காமரிடமும் சங்கரிடமும் மன்னிப்புக் கேட்டு தன்னையும் மகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டாள். ஆனால் கதிர்காமர் மறுத்துவிட்டார். ஆனால் உயர்ந்த குணமுடைய சங்கர் அவளையே தன் தாய் எனக்கூறி அன்போடு அரவணைத்துக் கொண்டான். அப்போது கதிர்காமர் தன் மனைவியை நோக்கி இருபது வருடங்களுக்கு முன்பு இவனை நீ அடித்து விரட்டினாய் இப்போது இவன் நிலையைப் பார். கடந்து வந்த பாதையைத் திரும்பிப்பார். சங்கரைப் போன்றவர்கள் மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்றினால் உருவாக்கப்படுபவர்கள் என அவளுடைய தவறுகளை சுட்டிக்காட்டி அவளை மன்னிக்க மறுத்தார்.

ஆனால் சங்கர், அப்பா என்னால்தான் தங்கச்சியையும் அம்மாவையும் வெறுத்தீர்கள். இன்று என்னாலேயே ஒன்று சேருங்கள். எனக்கு அம்மாவும் தங்கச்சியும் வேண்டும் என அடம்பிடித்தான். கதிர்காமரால் மறுக்க முடியவில்லை. அவர்கள் குடும்பம் மீண்டும் ஒன்று சேர்ந்தது. ஊரவர்கள் சங்கரை மகிழ்ந்து பாராட்டினார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Histoire drôle

Un monsieur rentre chez lui en taxi. A l'arrivée, le chauffeur annonce:
- ça fait 25F, monsieur!

Pouvez-vous reculer un peu, je n'ai que 21F?

Le directeur a des courants d'air dans la bouche. Savez-vous pourquoi? Parce qu'il n'a pas ces incisives.

«D'autres histoires drôles dans le prochain livre.»

***Thusi***



Dans un bois, vivaient quatre amis: un lièvre, un écureuil, une perdrix et un canard sauvage. Le lièvre disait: «je cours plus vite que tout le monde.» L'écureuil disait: «regardez! moi, je grimpe aux arbres mieux que vous.»

La perdrix disait: «moi, je vole toujours plus haut.» Le petit canard disait: «qu'est-ce que tout cela? moi; je nage et je plonge, l'eau ne me fait pas peur.» Là - dessus, le canard arrive.

Les quatre amis lui demandent: «Et toi que sais tu faire?» Le renard avait grand-faim. Il répond: «moi, je peux vous manger tout les quatres et je vais le faire..» Mais que se passe-t-il? le lièvre s'est enfui en courant. L'écureuil a grimpé en haut d'un chêne. La perdrix s'est envolée. Le canard a plongé dans la rivière. Le renard reste tout seul. Il pense tristement: «j'ai parlé trop vite.»

***K. Olivier Praveenan***

# Poule et oeufs en chocolat



Voilà une telle et grosse poulette faite avec des petits oeufs et des bons chocolats de pâques. Pour rigoler on a rajouté 8 gâteries que l'on peut trouver chez le boulanger, toute l'année amuse-toi à trouver!

Ensuite, compte sans le tromper, les poules, les oeufs et les lapins, mais seulement ceux qui n'ont pas de papier! cherche les 5 paires d'oeufs en chocolats en regardant leurs tailles mais aussi leur papier. Et pour finir trouve la petite décoration qui n'est pas terminée sur une des cloches.

***K. Prince Luxanan***

# Tortue et le moineau

Il était une fois une petite tortue qui s'ennuyait très fort dans son jardin. Elle aurait voulu voyager, voir du pays. Lorsqu'elle voyait passer les oiseaux au-dessus d'elle, elle soupirait et disait «Je ne suis pas heureuse, je me traîne sur la terre, je ne peux ni courir, ni sauter, ni voler! Quelle triste vie!» Un joyeux petit moineau qui passait par là l'entendit et lui dit: «petite tortue tu n' es pas si malheureuse, tu as une maison, une maison solide et qui te suit partout, moi je refais la mienne tous les ans et l'hiver je n' en ai pas du tout.»

***Taxayani Mahendrarajah***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Père noël en vacance

Le 27 juin ce matin-là, le père noël décida de prendre des vacances. Ses rennes broudaient parmi les étoiles. Chaver son chat, ronronnait sur le poêle le père noël dit:

- C'est décidé je prends un congé! il enfila son ciré jaune, ses bottes vertes et il vissa sur sa tête une casquette en toile rose, il jetta dans son sac à dos violet, du pain d'épice, un camembert, un saucisson, puis il s'admira dans la glose, Alors, chavert ricana:

Fraise, citron, pistache, aubergine: quelle élégance, pépère mono!

Chavert était parfois insolant. Il appelait le père noël «pépère mono» pour le faire enrager et le père noël répliqua:

- Chaver, tu n'y comprends rien, l'été c'est la saison des couleurs éclatantes. N'oublie donc pas que je suis célèbre, Si je mettais mon manteau rouge habituel et mes bottes noires ordinaire, les enfants me reconaitraient. Alors que là, je me passe inaperçu.

Chavert s'eclatta de rire:

-inaperçu? tu as l'air d'une glace à trois boules.

Le pére noël était véxé. Il mit son sac à dos et sortit en claquant la porte. Et partit en vacance au pol nord tellement qu'il était véxé et prix froid et il tomba malade, chaver était désolé parce qu'il remplaca le pére noël pour la fête de noël 1992.

***Mahendrarajah Dhushjanthy***

## சுதந்திர (மற்ற) வர்த்தக வலயம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் தீவிரமான முறையில் சுதந்திர வர்த்தக வலயங்கள் ஆரம்பிக்கப் பட்டு வருகின்றன. இலங்கையில் சுமார் 70, 000 -80, 000 தொழிலார்கள் இவற்றில் சுரண்டப்பட்டு வருகின்றார் கள். கடந்த மாதம் கொழும்புக்குத் தெற்கே 70 மைல்களுக்கப்பால் புதியதொரு சுதந்திர வர்த்தக வலயம் திறக்கப்பட்டுள்ளது. ஒரு தொழிற்சாலை அமைக்கப்பட்டதும் அவை புதிய இளம் தொழிலாளர்களை ஈர்க்கின்றன. குறைந்த பட்சம் 95% முதல் 97% வரையிலான தொழிலாளர்கள் பெண்களாக இருக்கும்படி பார்த்துக்கொள்கிறார்கள். ஆண்கள் 'போர்மன்' அல்லது நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளுக்கே தெரிவு செய்யப்படுகிறார்கள். பெண்கள் கிராமப்புறங்களிலிருந்தே கொண்டு வரப்படுகிறார்கள். அங்கு எவ்விதமான வாழ்க்கை வசதிகளும் கிடையாது. அவ்வசதிகள் வழங்கப்படுவதுமில்லை. பெண்கள் தாமாகவே தங்குமிடங் களைத் தேடிக்கொள்ள வேண்டும். இப்பிராந்தியத்தில் உள்ள வீட்டுச் சொந்தக்காரர்கள் தம் வீடுகளுக்கு முன்பாக உள்ள நிலத்தில் குடிசைகளை அமைக்கிறார்கள். கூரை தென்னோலையால் வேயப்பட்டுள்ளது. அதனுள், 25 தொடக்கம் 150 வரையான பெண்கள் வசிக்கிறார்கள். அவர்கள் அந்தக் குடிசையின் ஒரு மூலையில் சமைக்கிறார்கள். சுவரில் ஒவ்வொரு 1-3 அடிக்கு ஒன்றாக வெண்கட்டியால் கோடுகள் கீறப்பட்டுள்ளன. ஒரு பெண்பிள்ளை இருக்க வேண்டிய இடம் அதுதான். அவளின் துணிகளைக் கொண்ட சூட்கேஸ் பாயின் தலையணையாக உள்ளது. இந்த இலட்சணத்தில்தான் தொழிலாளர்கள் சக்தி சுரண்டப்படு கிறது.

உண்மையில் அத்தகைய நிலைமைகளை மோசமான ஒடுக்குமுறையில்லாமல் பராமரிக்கமுடியாது. இந்தப் பிராந்தியங்களில் யுவதிகளைப் பயமுறுத்த அரசபடைகள் பொலிஸ், இராணுவம் மட்டுமன்றி "மாபியா" பாணியிலான அமைப்புக்களும் அரை இராணுவ அமைப்புக்களும் அணிதிரட்டப்பட்டுள்ளன. அவர்கள் இப்பிராந்தியத்தில் உள்ள கடைச் சொந்தக்காரர்களுடன் சேர்ந்து செயற்படுகிறார்கள். பெண் யுவதிகள் இந்தக் கடைகளில் மட்டுமே அவர்களின் சாமான்களை வேண்டும்படி மிரட்டப்படுகிறார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் இந்த யுவதிகள் அருகிலுள்ள நகருக்குப் போவதுண்டு. அங்கு மரக்கறிகளையும் பொருட்களையும் வாங்குவது மலிவு. இந்த யுவதிகள் பைகளில் மரக்கறிகளையோ அல்லது மற்றவற்றையோ நகரத்தில் வாங்கிச் செல்வதைக் கண்டால் கடைச் சொந்தக்காரர் திரும்ப எதையும் இந்த யுவதிகளுக்கு விற்பனை செய்ய மாட்டார். அவள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு விடுவார். அவசியமானபோது அவளுக்கு கடனுக்கு பொருட்கள் கிடைக்காது. ஆதலால் யுவதிகள் பெரிதும் அந்தரிக்கின்றனர். சுதந்திர வர்த்தக வலயங்களில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள நிலமைகள் இதுதான். அவர்களின் நாட்சம்பளம் 2 1/2, அல்லது 3 டொலர்கள், அவ்வளவுதான்.

- விஜே டயஸ் -

செயலாளர், இலங்கை புரட்சி கம்யூனிஸ்ட் கழகம்.

*(1991, யூன்-30, சிட்னியில் ஆற்றிய உரை)*

நன்றி:- தொழிலாளர் பாதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

**தனது ஆறாவது ஆண்டில்**

**உங்களுக்கான**

**பிரெஞ்சு வகுப்புக்கள், ஆங்கில வகுப்புக்கள், கணனி வகுப்புக்கள் மற்றும் சிறுவர்களுக்கான தமிழ் வகுப்புக்களை நடத்தி வருகின்றது.**

**விபரங்கட்குத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்:**

*** 40 21 32 92 ***

---

**தெருவோரங்களில், மரங்களின் கீழ்**
**அகதி முகாம்களில் நித்தமும் அவதியுற்று**
**அல்லற் பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும்**
**எம் தேச மக்களுக்கு, எம் சகோதரர்கட்கு**
**ஒரு கை கொடுப்போம்.**

**எங்கள் பங்களிப்பை**

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்

**ஊடாக உறுதிப்படுத்துவோம்.**

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்சுக் கிளை**
*188, Rue ORDENER, 75018 PARIS.*
*Tel: 42 63 24 87*

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்**
**83/2, காங்கேசன்துறை வீதி**
**கொக்குவில்.**

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்**

www.tamilarangam.net

# அறிவுப் போட்டி 02

1) இவ்வருடம் இடம்பெற்ற உலகக் கிரிக்கட் போட்டியில் சிறந்த விளையாட்டு வீரருக்கான பரிசைப் பெற்றவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்.

2) தமிழ்த் தாயின் அணிகலன்கள் ஐந்தும் எவை?

3) 1956ம் ஆண்டு பிரான்சில் நடந்த சர்வதேச திரைப்பட விழாவில் விருதினைப் பெற்ற திரைப்பட மேதை சத்தியஜித்ரேயின் திரைப்படம் எது?

4) தாவர ஒளித்தொகுப்புக்குத் தேவையானவை எவை?

5) பிரான்சில் ஐந்து ஆண்டுகால சாதனைகளை தன்னகத்தே அடக்கி ஆறாவது ஆண்டில் வெற்றி நடை போடும் இலாப நோக்கமற்ற பொதுத் ஸ்தாபனம் எது?

6) Deep Rivers move in silence shallow brooks are noisy - தமிழ் விளக்கம்.

7) ஈபில் கோபுரம் எத்தனை அடி உயரம்.

8) சிலப்பதிகாரத்தை பிரெஞ்சுமொழியில் மொழி பெயர்த்த இருவர் பெயர் என்ன? ஒருவர் தமிழர், இன்னொருவர் பிரெஞ்சு எழுத்தாளர்.

9) யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் யார்?

10) பிரான்சின் 'வெர்செயில்' அரண்மனையைக் கட்டிய மன்னன் யார்?

## நிபந்தனைகள்

1) வான்மதி குடும்பத்தினர் பங்கு பற்றமுடியாது.
2) ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
3) வயதெல்லை இல்லை, யாரும் பங்குபற்றலாம்.
4) வதிவிட அனுமதி அட்டை அல்லது பாடசாலை அடையாள அட்டையின் போட்டோப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

இப்பக்கத்தை அப்படியே கிழித்து விடைகளை எழுதி அனுப்பவும். பெறுமதி மிக்க பரிசில்கள் காத்திருக்கின்றன.

அனுப்ப வேண்டிய முகவரி:
VANMATHY
c/o K. SIVARUBAN,
13, RUE DES PEUPLIERS,
95140 GARGES LES GONESSE,
FRANCE.

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி:- 15-06-1992

### வான்மதி அறிவுப் போட்டி 01 - விடைகள்

1) வீரமாமுனிவர்(ஜோசெப் பெஸ்கி) 2) பாரதி 3) குகன் 4) தனிப்புறா 5) கலிலியோ 6) ஹெலி வால் வெள்ளி 7) சோக்கிரட்டீஸ் 8) கரி கெட்ட வாயுக்களை தனக்குள்ளே இழுத்து வைத்துக் கொள்ளும் தன்மையுடையது. எனவே உணவுப் பொருட்கள் கெட்டுப் போகாது. 9)மன்னுயிரைத் தன்னுயிர் போல் காப்பாற்று 10) வான்மதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அவ்வையார்

ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்று பைந் தமிழில் நீதி நெறி கள் பல சொன்னவள். 05-04-1992 ஞாயிற்றுக்கிழமை தமிழீழ மெங்கும் சுற்றுப் பயணம் செய்து பிரான்ஸ் வரை வந்து சென் றாள்.

அன்னை பூபதியின் தியாகப் மரணத்தைக் கண்டு பொங்கி எழுந்து புயலென நீதி கேட்டுப் புறப்படுகிறாள். மாணிக்கம்பட்டி, அழகு தமிழ் பேசும் பசுஞ்சோலைகள் நிரம்பிய கிராமம் 'மெனிக்கம்பிட்டிய' என பெயர் மாற்றஞ் செய்யப்பட்டிருப்பதைக் கண்டு மனம் குமுறுகிறாள். விடுதலை என்ற பெயரில் வீணர்கள் புரிந்த கொடுஞ் செயல்களைச் சாடுகிறாள். சுட்டபழம் தின்று சிறுவனிடம் பாடம் கற்றவள் தமிழீழத்திலும் அரசியலை சின்னஞ்சிறு போராளியிடம் கற்றுக் கொள்கிறாள். அமைதி கெடுக்க வந்தவர்களின் முகமூடிகளை கழற்றி வைத்து தியாக மறவர்களுடன் வெற்றிக் களிப்பில் மூழ்கி அவர்தம் தியாகங்களில் மனம் நெகிழ்ந்து கோட்டையைப் பிடித்து தம் கொடி பறக்க வைத்த ஈழக் குயில்களின் வீரவரலாற்றை தமிழ் மக்கள் வாழும் இடமெல்லாம் பேசவென்று பிரான்ஸ் வந்தடைந்து அங்கேயும் நீதி சொல்லுகிறாள்.

கலைஞர்கள் நேரத்தைக் கவனித்திருந்தால் எதுவித குறையும் இருந்திராது.

பிரான்ஸ் தமிழர் கலை கலாச்சார அவையினர் வழங்கிய 'நவீன அவ்வையார்' நாடகத்தைத் தயாரித்து வழங்கிய அனைத்துக் கலைஞர்களையும் வான்மதி கலையகம் வாழ்த்தி வரவேற்கிறது.

- குணேஷ் -



எமனின் உதவியாளர்:- ரஞ்சனின்ர தொல்லை தாங்கமுடியலே.

எமன்:- ஏன் என்னவாம்?

எமனின் உதவியாளர்:- அவற்றை ஒரு பக்க துடையைக் காணலயாம். அதைத் தரட்டாம்.

எமன்:- அது கொழும்பில ஒரு இறச்சிக்கடையில தொங்குதென்று சொல்லு.

- கெ. யூயின் -

பாவலர் தெ. அ. துரையப்பா பிள்ளை நினைவாக பாரிஸ் ஈழநாடு ஆரவில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பாரிஸ் கிளை நடாத்தும் கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் 24. 07. 1992க்கு முன்னர் தமது ஆக்கங்களை அனுப்பி வைக்கும்படி கோரப் படுகின்றனர்.

தொடர்பு முகவரி:-

M. SINNATHURAI

73, Rue DOUDEAUVILLE,

75018 PARIS.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வான்மதி கலையகம் வழங்கும் "புதிய பறவைகள்" வீடியோ திரைப்பட படப்பிடிப்பு 14. 03. 1992 ல் திரு. ஞானம் பீரிஸ் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது. ஞானம் பீரிசின் தனிப்புறாவைத் தொடர்ந்து நீதியின் சோதனை பின் விடுதலைப் பாதையில் ஆகிய வீடியோப் படங்கள் வெளி வந்தமை அனைவரும் அறிந்ததே. G. P பிலிம்ஸ் சார்பாக வதனி தயாரிக்க ஞானம் பீரிஸ் எழுதி இயக்கிய "விடுதலைப் பாதையில்" திரைப்படம் திரையரங்கில் "4x3" திரையில் காண்பிக்கப்பட்டு இரசிகர்களின் பெரும் பாராட்டை பெற்றது குறிப்பிடப்பட வேண்டிய தொன்று. பாரிஸ் தமிழ்க் கலைஞர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற ஒருதரமான முழு நீள திரைப்படமாக "புதிய பறவைகள்" தயாராகி வருகிறது. சினிமாவுக்கு வேண்டிய அனைத்து அம்சங்களுடனும் ஈழ மண்ணின் தனித்துவத்துடனும் வித்தியாசமான கதையம்சத்துடனும் தயாராகும் இத் திரைப்படத்தை K. K. S ரெலிமூவி கருணாநிதியும் ஜெயதாசனும் ஒளிப்பதிவு செய்ய இளைய நிலா இசைக் குழுவினர் இன்னிசை மழை பொழிய சண்முகநாதன் இயக்கி வருகின்றார். தயாநிதி, குணபாலன், சண் மாஸ்டர், சண்முகநாதன், சாம்சன், வாணி, துஷி, நீலாட்சி, லோகதாஸ், கணேஸ், சிறீதரன், கஜன், மாஸ்டர் தீபன், செல்விகள், தட்சாயினி, லியோனி, இன்னும் பல முக்கிய கலைஞர்கள் பங்கெடுத்துக் கொள்ளும் இத் திரைப்படம் ஈழத்தின் கலையுலகை அதன் தரத்தை தனித் தன்மையை வெளிப்படுத்தும் என்கிறார், கதை, வசனம், பாடல்கள் எழுதும் ரமேஷ் அவர்கள்.

- கெங்கராஜ் -


மிக விரைவில்......

K. B. S FILM
INTERNATIONAL

வழங்கும்

"தலைமுறை"

ஒளிப்பதிவு:
M. குணராஜா
T. ரங்கேஸ்வரன்

தொடர்புகளுக்கு:
→ வான்மதி கலையகம் ←




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ஏசியா

## என்ரபிறைஸ்

இலங்கை, இந்திய வியட்னாமிய மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், அன்பளிப்புப் பொருட்கள், எவர்சில்வர் பாத்திர வகைகள், பலவண்ணப் புடவைகள், பட்டுப்புடவைகள், ஆண்கள் பெண்கள் சிறுவர்களுக்கான சகலவிதமான உடைகள். எமது தயாரிப்பில் தரமான மிளகாய்த்தூள், அரிசிமா, கோப்பித்தூள், ஊறுகாய்வகைகள், நண்டு, இறால், சுறா, விளைமீன் போன்ற கடல் உணவுவகைகள்,

மற்றும் தமிழ், சிங்கள, இந்தி, ஆங்கில வீடியோ, ஓடியோ பிரதிகள், கொம்பக் டிஸ்குகள்

**இன்னும்**

வார, மாத தமிழ் சஞ்சிகைகள், பத்திரிகைகளுடன் உங்கள் அபிமான பல்சுவை மாத இதழ் வான்மதியையும் பெற்றுக் கொள்ள

# ASIA ENTERPRISE

230, Rue du Fg. St. Denis, 75010 Paris.

Mo: La Chapelle ou Gare du Nord

Tel: 40 34 87 46 Fax: 42 05 04 04

www.tamilarangam.net

அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்

14. 06. 1992 ஞாயிறு 2. 30, 4. 30, 6. 30 காட்சிகள்.

"வசந்தம்" திரையரங்கில்

பிரான்ஸ் தமிழ்க் கலைஞர்களின் ஒன்றிணைந்த படைப்பு

G. P பிலிம்ஸ் வழங்கும்

# விடுதலை பாதையில்...

**கதை வசனம் பாடல் இயக்கம்**
ஞானம் பீரிஸ்

**தயாரிப்பு**
வதனி

**ஒளிப்பதிவு**
K. K. S ரெலிஸ்ரூவி

**இசை**
S. K. பஞ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்